உ

கடவுள் துணை

ம. கு. ஜ. கோவிந்தசாமி படையாச்சியார் இயற்றிய

மகாபதிவிரதா சிரோன்மணியாகிய

# அருந்ததி கலியாண நாடகம்



அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

1953 [அணு 12

...ண்டவராயப்பிள்ளை வீதி.

238

17 NOV 1953

O>892 MGP, A
N 53
108908

உ

கடவுள் துணை

மகா பதிவிரதா சிரோன்மணியாகிய

# அருந்ததி
# கலியாண நாடகம்

இது

கொஞ்சிகுப்பம்

**துரைசாமி சமுஷ்டியார் வித்யாகுருவாகிய**

மேல்பட்டாம்பாக்கம் சங்கரையர் குமாரனும்

வித்யாமாணாக்கருமான

ம-ா-ா-ஸ்ரீ,

**குப்புசாமி அய்யர் அவர்களால்**

கதை அடக்கித்தந்தபடி,

கூடலூர் ஓல்டு டவுன் தொண்டைமாநத்தம்

புக்ஷாப்

**ம. கு. ஜ. கோவிந்தசாமி படையாச்சியார்**

அவர்களால் இயற்றியது.

**அமரப்பேடு. இராஜரத்தின முதலியார்**

மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பதிப்புரிமை]

1953 [விலை அணா 10

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

## ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகல அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், இந்த மகா பதிவிரதாசிரோன் மணியாகிய "அருந்ததி கலியாண நாடகம்" என்னும் புத்தகத்தை கூடலூர் ஜில்டு டவுன், தொண்டைமாநத்தம் புக்ஷாப்-மா. கு. ஜ. கோவிந்தசாமி படையாச்சியாரவர்களால் இயற்றியதை, ம-ா-ா-ஸ்ரீ சென்னை புஸ்தக வியாபாரம் கே. வி. துரைசாமி முதலியார் ஷை கோவிந்தசாமி படையாச்சியாரிடம் சர்வ சுதந்தரமும் பெற்றுத் தானே 1927ஹு த்தில் அச்சிட்டுத் தன்பேரால் காபிரைட்செய்து அனுபவித்துவந்தனர். பிறகு அவர் ஜேஷ்டகுமாரர் ம-ா-ா-ஸ்ரீ, சுந்தரமுதலியார் அனுபவித்துவந்த இந்நாடகததின் காபிரைட் சுதந்தரத்தை அடியிற்கண்ட யான் ஷை முதலியாரிடம் கிரயத்திற் குப்பெற்று, என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். ஆகை யால் இப்புத்தகத்தை என் உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரியப்படுததியிருக்கிறேன்.

இப்படிக்கு

அமரப்பேடு. இராஜரத்தின முதலியார்

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

உ

ஸ்ரீ தண்டாயுதபாணி துணை

மகா பதிவிரதா சிரோன்மணியாகிய

# அருந்ததி கலியாண நாடகம்



## காப்பு-வெண்பா

ஓங்காரத்தின் பொருளால் ஓதக் கரிதுருவாய்
பாங்காகப் போற்றிடும் பக்தர்க்காய்-ஆங்காங்கு
சென்றமர்ந்து காத்து செங்கமல மீதமரும்
என்றன்குரு ஏகதந்தன் காப்பு.

## சகலதேவர் தியானம் விருத்தம்

உத்தமிஎனக்கொண்டாடி உலகமேபுகழ்ந்துபோற்றும்
சித்திரஅருந்ததியின் சீர்மணம்தன்னைப்பேச
அத்திமாமுகவன்வேலன் அரனரிஉமையாள்வாணி
பக்தர்கள்புலவோர்பாத பங்கயத்தாளேபோற்றி.

## அவையடக்கம் கலிவிருத்தம்

வன்னமாமயி லாடிடசேவலும்
தன்னின்தோகைகொண் டாடியவாறுபோல்
சொன்னேன்மூடனுன் குற்றம்மலியினும்
மின்னம்மீக்க பெரும்பதம்போற்றினேன்.



## பாண்டியன் வருகிற விருத்தம்

அருமையோர்வேத மந்திரங்களோத
    ஆலவட்டசாமரையு மிருபாலேந்தி
பெருமைபெறுமா தர்களும் கடனமாட
    பின்னமில்லாமதிமந்திரி அருகில்சூழ
தருமநெறிவழுவாது ஆறிலொன்று
    தான்வாங்கிசகலஜனம் புகழ்ந்துபோற்ற
பரமனடிதினம்போற்றி யாகசெய்யும்
    பாரக்கிரமபாண்டியனும் வருகின்றேனே.

### தரு

பாலமன்மதனென்ன    மேலுமுடியுந்துன்ன
பாண்டியராஜன்வந்தேன்    கொலுசம்பிரமதாக    பா

ஆலகாலனபதத்தை    அன்பாய்மனதிலேற்றி
சீலமானதருமநெறி    வழுவாதுசாற்றி

சிவனி பள்ருடசுதமதை    கவனமாய்துதித்து
பவமதிலாமலே    அவனியில்கதித்து    பா

மறையோராசிர்வதிக்க    மன்னமன்னர்துதிக்க
இறையோனென்றேகுடிகள்    எல்லோருமேமதிக்க

சுருள் இந்திரனைஅதி    சுந்திரனிவனென்ன
சந்திரசூரியர்    அந்தரார்புகழ்கன    பா

மகிமந்திரியிருபுறம் மகிழ்ச்சியுடனெருங்க
அதிவிதமங்கையர் ஆலவட்டமுமதாங்க

அருள அறநெறிவழுவாத பெருமைசேர்தீரன்
திறமைசேர்வுலகினில் இவனதிகாரன் பா

மாதமும்மாரிபெய்து மதிநலமுமசெழிக்க
நீதியரசுசெய்யும் நிமலனெனநேகதிக்க

அருள் சித்தமுமூலகினில் கர்த்தனெனநேற்ற
சுத்தமாய்த்தேவரும் புஷ்பம்தூற்ற பா

## மேற்படியார் சுவாமி துதி

## தேவாரம்

அன்பானபூமியெனும் சபைக்காய்யெட்டு
அரியசாண்நீளமுட னகலம்நான்கு
இன்பகாண்வைத்து கைகால்காட்டி
எழிலானமுகமுடனும் பெண்ணுங்காட்டி
துன்பமிலாசுவாசமெனும் கயிற்றைமாட்டி
தோன்றுது ஆட்டிவிக்கும் குறவனுன
என்பிரானே சொக்கநாதாவுந்தன்
எழில்பாதகமலத்தை போற்றினேனே.

## பாண்டியன் தேசவிசாரணை தரு

மந்திரியே யெந்தன்நாட்டில் மாதமும்மாரிபெய்து
சந்திரமாய் குடிபடைகள் சுகமதுவா சொல்மந்திரி

அரிஹர பிர்மாலயம் அன்புடைய பூசையெல்லாம்
நெறியுடன் நடக்கிறதா நீயுரைப்பாய் எனதுமந்திரி

வேதவேதியர் தினம் வேள்வியுடன் மந்திரங்கள்
போதமாய் நடத்துகிறரா புகலுவாய் எனதுமந்திரி

கன்னியர்கள் கற்புநிலை கணவனையேதெய்வமதாய்
எண்ணியேநடக்கின்றரோ எடுத்துரைப்பாய்எனதுமந்திரி

### பாண்டியன் கவி

திரிபுரமெரித்தயீசன் திருவருள் கன்னுலப்போ
ஒருகுறைவில்லாமல்தானே உகந்துமேநடப்பதாலே
நெறியுளசபையில்தானே மின்னையமுடனமர்ந்து
பரிவுடனரசுசெய்து பக்ஷமாயிருக்கலாமே,

போது வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டியன் கொலுவிலமர்ந்திருக்க, கைலாசத்தில் பரமசிவம் கொலுவாக வருவது

## பரமசிவன் கவி

திங்களும்கங்கைதும்பை சிரந்தனில் அணிந்தநாதன்
மங்கைபார்வதியாள்கூட மான்மழுசூலமேந்தி
சிங்காரரிஷபமேறி தேவர்கள்பணிந்துபோற்ற
சங்கரர்கைலைதன்னில் தற்பரன்வருகின்றாரே.

தரு

அண்டர்முனிவர்வாழ்த்த தொண்டர்பணிந்துபோற்ற
ஆதிசிவனும்வந்தனர் கைலாசவாசர்சோதிசொரூபர்வந்தனர்

வண்டணிபார்வதியாள் வஞ்சியிடத்தில்சூழ
தெண்டஞ்செய்துமேரிஷி தேவர் அடியில்தாழ

அருள் சிரமதில்கங்கையை பிரியமாய்தரித்தேன்
கரமதில்மான்மழு கபாலமும்பிடித்தேன் அண்

தொண்டன்மார்க்கண்டனுமே ஆதித்லிங்கத்தைதொழ
சண்டன்பாசத்தைவீச தருணமென்மீதில்விழ

அருள் சாய்ந்திடயேமனை பாய்ந்துமேவுதைத்தேன்
மாய்ந்திடாமல்தொண்டன் மருவாமளித்தேன் அண்

விசையன்தனக்காகநான் வேடனுருவாய்வந்தேன்
திசைபுகழ்தனுசினால் சிரசில்அடியும்பட்டேன்

அருள் ஜெகமதில் அவனிட அகமதுமகிழ
வகையுடன்பாசுபதம் தந்தேன்புகழ அண்

நந்தியெந்தனைதாங்க நந்திதேவர்கைகட்ட
சுந்தரமாய் கோவிந்தன் சொல்லும் பதமும்எட்ட

அருள் சோதியும் நீதியும் ஆதியும் நானே
பாதகந்தீர்த்திடும் சாதனுந் தானே அண்

கவி

என்னிட அருகிலிருக்கும் இயல்புள்ள நந்திகேளாய்
பன்னிடும்ரிஷிகள் தேவர் பக்தர்கள் சூழுமிந்த
நன்னயகைலைதன்னில் நலமிகும்சத்தியான
என்னிடதேவிதன்னை ஓடிநீ அழைத்துவாராய்.



## பார்வதி வருகிற கவி

ஈசனார் அழைத்தாரென்று யேந்திழைகாதில்கேட்டு
மாசிலாப்பணிகள்பூண்டு மங்கையர் அடியில்தாழ
வாசமாமலர்கள்சூடி வண்ணநற்பட்டுடுத்தி
பாசமாய்நாதன்பக்கல் பார்வதிவருகின்ருளே.

### தரு

வந்தேன் பார்வதியெனுமாது வஞ்சியர்கூடியேதஞ்சமென்றேற்ற
வாரேன் பார்வதியெனுமாது

வந்தேன் பார்வதிமாது — வானவாடியேபோற்ற
கந்தம்கதம்பம்பூசி — கன்னியருடன்கூடி
சுருள் கந்தன்மனமகிழும் — உத்தமிமாது
சுத்தமாய்ஜெகபுகழ் — பதிவிரதை — வந்

ஆலகாலத்தையீசன் — அருந்தஅதையறிந்து
சீலமாய்கண்டத்தை — தேவிபிடித்தேன்நன்று
சுருள் தேவரும்பாவலர் — மூவரும்மகிழ
ஆவலாய்புவியினில் — ஜீவனும்புகழ — வந்

பிரமன் சிரத்திலொன்றைப் — பிடித்தீசனும்கிள்ள
சிரத்திலதுவும்பற்ற — கர்த்தன்வெளியால்தள்ள
சுருள் கண்ணனின்சொல்படி — உன்னிதம்தீர்த்தேன்
எண்ணியேதுதித்திடும் — பக்தரைகாத்தேன் — வந்

அகோரஉருவெடுத்து — அசுரன்மகுடம்தன்னை
சகத்திலொழித்துவைத்தேன் தவத்தோர்போற்றிடவென்னை
சுருள் சங்கரிசாம்பவி — திங்கள்சடாதரி
மங்களகாரணி — எங்கும்வியாதரி — வந்

பார்வதி சரணம் தரு

சரணம்செய்தேன்நாதனே தருணமிதுவேதனே
கருணை தாருநீதனே கைலைவாழும்போதனே சர

பரமசிவன் தரு

வாழிவாழி மங்கையே வஞ்சியேநீயிங்கையே
ஆழிகொண்டோன்தங்கையே அமர்ந்திடுவாய்நங்கையே வா

பார்வதி தரு

அமருமென்றயீசனே ஆசைகொண்டேன்நேசனே
உமையாமெந்தன்பாசனே உரைப்பாய்வேதமுல்லாசனே அ

பரமசிவன் தரு

மாதேயிதுவாதடி மங்கையேசொல்லாதடி
கோதேயிதுநீதடி குற்றமேபொல்லாதடி மா

வசனம்

ஏ பார்வதி! வேதம் வேதமென்பதும் சொன்னால் ஏதாகிலும் நீ குற்றமென்பதும் நான் கோபித்து சாபம் தருவதும் வேண்டாம் கேழக்காத்து அமர்ந்திருப்பாய.

பார்வதி கவி

நீதிலாநாதாநீதான் தெரிவைக்கும்வேதந்தன்னை
ஓதுவீரென்றுசொன்னால் உரைப்பனென்குற்றமென்றீர்
நீதியாயுந்தன்சொல்லு நிசமுடன்கண்ணில்லானை
கோதகனொள்ளையென்றால் கோபிப்பதொக்குமதானே.

வசனம்

நாதா! தாங்கள் சொல்லுவது நன்றாயிருக்கு. உமது வார்த்தை எப்படி யிருக்குமென்றால்? கண்ணில்லாதவனை கொள்ளையென்றால் கோபிப்பதைப்போல இருக்கின்றது.

பரமசிவன் தரு

மாதேஉரைத்ததென்னவோது மங்கையேயிதுவும்பொல்லாது

பார்வதி தரு

உள்ளதைசொல்வோமென்றால்நாதா எனக்குக்கோபமுமேனோவேதா

பரமசிவன் தரு

உற்றதென்றசொன்னாயேமங்கை உரைப்பாயிதனைநீயும் யிங்கை

பார்வதி தரு

உரைப்பேன்கேளும் இறையீசா உண்மையாகவேவாளும்நேசா

பார்வதி கவி

மார்க்கண்டன் தந்தையிடம் பதினாறுநின்மகனுக்கெனவுரைத்து
தீர்க்கமுடனே வெகுநாளிருந்திடவும் சொல்புரட்டிசெய்ததேனோ
கார்க்கின்றகடவுளெனும் காரணனே நின்மொழிப்படியேயன்றோ
மூர்க்கமுடன் இந்தப்பொய்சொன்னது எதற்காகச்சொல்லுவாயே.

வசனம்

தேவா! மிருகண்ட முனியிடம் உன்மகனுக்கு வயது பதினாறு தான் என வுரைத்து பின் புரட்டிவிட்டீலலையா இது சரியா?

பரமசிவன் கவி

மாதேநீ சொல்லுவது நன்றுநன்று
மாநிலத்தில் மிருகண்டன் தனக்குமூர்த்தி
வாதாகேள் பதினாறு வயதுவுள்ள
வல்லவனை பெறுவாயென் றுரைத்ததன்றி
தீதாக அத்துடனே யிறப்பானென்று
தேவியேநான் ஒருபோதும் சொல்லவில்லை
கோகேகேள் என்றும்பதி னாறதாக
கொடுத்ததன்றி வேறுவரம் ஏதுதானே.

வசனம்

மாதே! மிருகண்டனிடம் பதினாறுவயதுடைய மைந்தனைப் பெறுவாயென உரைத்ததன்றி அவன் அத்தோடு இறப்பானென்று சொல்லவில்லை. பின்னும் என்றும் பதினாறாக கொடுத்தேன் அதுவும் அவன் பூசை தபத்துக்கிரங்கி பக்தபூசை உடையவர்கள் பிரம லிபியையும் தாண்டலாம் எமனையும் வெல்லலாம் என்பதற்கு இது சாக்ஷி பெண்ணே!

பார்வதி தரு

அதுயிருக்கட்டுமே நாதா உந்தன்
சதிமோசமறிவேனே வேதா

விதியோலைவகையாற்றினில் வேண்டிமண்சுமந்து
பதியானபாண்டியன்கை பட்டீரேபிரம்படி

பரமசிவன் தரு

பட்டல்லவோகீர்த்தி யானேன் மாதே
பாவையே என்கூத்து தானே

அட்டியில்லாராசன் அடிக்கசகலஜீவன்
இட்டெனஅடிபட்டு இசைத்துஎன்னருள் கண்டார்

பார்வதி தரு

விஜயன்வில்லினால் அடித்தான் மிக
வேண்டிஅடிபட்டு துடித்தாய்

அசலிலாநாதனே அர்ச்சுனன்வில்லடி
நிசமுடன்பட்டதேன் நீயும்உரைப்பாயே

பரமசிவன் தரு

தவத்தின்நிலையதை காண நானும்
தான்சென்றேன்வேடனாய் தோண

அபத்தம்நீசொல்லாதே அவனைசோதித்தேனே
மருத்துவமாய்பாசுபதமதும் தந்தேனே

பார்வதி தரு

காட்டுவேடன்பெச்சில் தின்றீர் திண்ணனர்
காலின்செருப்படி பட்டீர்

வாட்டமாய்சாக்கிடன வகையாய்கல்லடிபட்டீர்
மேட்டிமையோயிது மெல்லியறிவேனே

பரமசிவன் தரு

கண்ணப்பன்சாக்கியன் பெண்ணே அவர்
கல்லடிசெருப்படி நண்ணே

எண்ணிமிகவென்னை ஏசிஅடிக்கவில்லை
அன்னவர்அன்பினால் அல்லோ அடித்தார்கள்

பார்வதி கவி

மன்னனேநானும்சொல்ல மார்க்கமும்அதற்குசொன்னாய்
இன்னிலம்தனனில்நீர்தான் இழிவுகள்அநேகம்பட்டாய்
கன்னவில்மதனைகொன்றாய் காலனைமிகவுதைத்தாய்
வன்னயாஇவைகட்கென்ன வகையதுசொல்லுவீரோ.

பரமசிவன் கவி

மதனவனும் செய்துஷ்ட தனமடக்கி
மார்க்கமுடன் இலக்ஷபதும் செய்துவைத்தேன்

இதமுடனே யென்மீதில் பாசம்வீச
எமனையும் பூமியதில் விழவுதைத்தேன்
மதியில்லா நீகேட்க பதிலேனானும்
மர்மமதை யுரைத்திருந்தால் தேவர்சித்தர்
துதிபுரிய வருவோர்கள் காப்பார்பெண்ணே
தோகையே அமர்ந்துபினி அருள்செய்வோமே.

பொது வசனம்

இந்தப்பிரகாரம் கைலாசத்தில் பார்வதியும் பரமசிவனும் சில ரகசியங்கள் பேசி அமர்ந்து பக்தர்க்கருள் செய்திருக்க வசிஷ்டர் வருவது.



## வசிஷ்டர் வருகிற கவி

கதிர்குலத்தின் குருவாக வந்ததீரன்
காவியுடன் ருத்ராக்ஷ மிகவேபூண்டு
துதிபுரிந்து சித்தர்முனி அடியில்தாழ
சுத்தமுடன் கமண்டலமாத் திரைகோலேந்தி
பதியில்மிகும் திருநீறும் நிறையப்பூசி
பாசகுறட்டுவசைய பாரோர்போற்ற
நதிமதியு மணிந்தசிவன் பாதங்காண
நாடியிதோ வசிஷ்டரும் வருகின்றாரே.

வசிஷ்டர் தரு

வந்தார்வசிஷ்டமுனி நாரதர் வேதாந்தபோதர்
வாரார்வசிஷ்டமுனி நாரதர்

வந்தார்வசிஷ்டமுனி வானவர்களும்போற்ற
சுந்தரப்புவிமீது துதித்துஎவரும்ஏற்ற வந்

சோதிசெஞ்சடையும் முடித்து இருகாதினில்
நீதியாய்குண்டலம் தொடுத்து
ஆதிபொருளேயென்று ஆனந்தமாய்துதித்து
தீதிலாபரமசிவமே எனமதித்து வந்

அரையில்பீதாம்பர மணிந்து முப்புரியுடன்
ஆரம்ருத்ராக்ஷமும் புனைந்து
கரமதில்தண்டு கமண்டலமும்பிடித்து
தரைபுகழும்புலித்தோ லாசனமெடுத்து வந்

திருநீறைநுதலில் தரித்து பஞ்சாக்ஷரத்தை
இருநயமதனில் குறித்து
அருந்தவத்தோர்களில் அதிகமேன்மைபெற்றோரான்
பிரியமுடையவற்கு சரிதிபோதித்தவர்தான் வந்

## தேவாரம்

வேதமும்மலையுமாகி விண்ணுடன்மண்ணுமாகி
நாதமும்விந்துமாகி நடுமுடிவடிவுமாகி
சீதமுந்தணலுமாகி சிர்பராநந்தமாகி
ஆதியாய்நிறைந்தஜோதி அரன்திருவடிதாள்போற்றி.

## பொது வசனம்

இந்தப்படி வசிஷ்டர்வந்து சிவனை துதித்து சிவனை காணச் சொல்லி செல்வதற்காக சண்டிகையை யழைக்க வருவது.

## சண்டிகை வருகிற கவி

மேதினிதன்னில்வாழு மெல்லியரெல்லாம்போற்றும்
கோதிலாவசிஷ்டருக்கு குணமிகும்தேவிதானும்
சோதிமாமணிதுலங்க சந்திர ஆரம்பூண்டு
தாதியர்வெகுபேர்சூழ சண்டிகைவருகின்றாளே.

## தரு

அண்டர்மாதோவென்றேற்றி அகிலத்தில்மிகசார்ற
சண்டிகையானமாது தையலும்வாறேன் அ

சேலைவிழியுமென்ன சிற்றிடைஒட்டியாணம்துன்ன
வாலக்குயிலோவென்ன வஞ்சியும்வாறேன் அ

வஞ்சியென்தனத்தைகண்டு வாலிபர்மனதுஏங்க
கொஞ்சிராகங்கள்பாடி கோதையும்வாறேன் அ



அன்னநடை நடந்து அருமுனிவர் தன்பக்கல்
சின்னவயதாமென்ன சேயிழைவாரேன் அ

காலினில் அணிந்த தண்டை கீதமிகவேபேச
மாலின்தேவியோவென்ன மங்கையும்வாரேன் அ

வசிஷ்டர் கவி

ஆதியாம்பரமன்பாதம் அன்புடன்தினமும்போற்றும்
வேதியர்மணியேசுவாமி விரிமலர்பாதம்தன்னில்
நீதியாம்மலர்கள்கொண்டு நின்னையமுடன்பூசித்து
காதலாய்தொழுதேன்யிந்த கன்னியைகாப்பாய்போற்றி.

வசிஷ்டர் தரு

வாழிநீமயிலே வஞ்சியென்குயிலே
வார்த்தையொன்றுசொல்லுவேன் கேள்ஒயிலே
ஆளிகொண்டோனும் அயனும்தேடிக்காணு
அரன்காக்ஷிகண்டுவாரேன் அரிவைநீயிங்கிருப்பாய்

சண்டிகை தரு

எந்தனின்நாதா என்மீதருதா
ஏந்திழைநான்தனித்து இருப்பேனோ
விந்தைசேர்உலகில் வெகுலீலைசெய்யலாம்
வேதாயிதனைவிட ஏதாபதமுமுண்டா

வசிஷ்டர் தரு

பத்தினிபெண்ணே பாளையேஎண்ணி
பாவையேவரப்போரேன் எட்டிநில்லும்



அத்தனைதுதித்து அரும்வரம்பெறுகாமல்
சிற்றின்பத்துழன்று சீச்சியிருப்பேனே

சண்டிகை தரு

உரைத்திடுவாரா உண்மையாய்சீரா
ஓகோகூடியாடலாம் வருவீரே
மறுத்தும்தன்கணை மார்மீதுபாயுதே
இருக்கித்தழுவியே இருந்திடவாருமே

வதிஷ்டர் தரு

பெண்ணுருநீயும் பேயுருகாயே
பேதையேயெட்டிநீ செல்லுவாயே
மண்ணில்செய்தவினை மாமுலையிரைச்சியும்
கண்முன்னேவருவபாய் காணவந்தாயல்லோ

சண்டிகை தரு

நாதாநீவாரும் நங்கையைச்சேரும்
நழுவுதேஆடையும் என்னசெய்வேன்
தீதுகளில்லாமல் தெரிவையுடன்நீரும்
சேர்ந்தால்பதமல்லால் சிவபதம்வேறுண்டோ

வதிஷ்டர் வசனம்

மாதே! என்ன சொன்னாலும் கேளேன். குழந்தையுடன் பத்திரமாகயிரும். மூன்றுநாளில் வந்து சேருகிறேன், வேறு பேசாதே.

(ஆண்டிபண்டாரம் உனைவேண்டி என்ற வர்ணமெட்டு)

சண்டிகை தரு

நாதாவந்திடுவாய் மாரன்வாதை தந்திடுரான் நீயே
ஈதோதென்றல்வீசுதே என்னுடலும் கூசுதே
வேதாபதமுங்காக்ஷி வேணபடியேகளைச்செய்கிறேன் நா

வசிஷ்டர் தரு

சீச்சீ நில்லாதே உந்தன் பேச்சும் செல்லாதே யிங்கு
ஆச்சி அநேககாலம் அரிவையேவுன்மோகமதால
காக்ஷிகண்டுநான்வாரேன்கன்னி என்னிடம்பன்னிபேசாதே

சண்டிகை தரு

ஆவிசோருதே எந்தன் அங்கம்வாடுதே நாதா
தேவி எனை இன்று சேர்ந்து சிவனைக்காண நாளை செல்லும்
மேவி எனைக்கூடியாட மெல்லவாரும் வல்லிசேரும் ஆ

வசிஷ்டர் தரு

சென்றுவந்திடுவேன் மூன்றுதினத்தில் கண்டிடுவேன் உனை
நன்றல்ல சொல்லும் வார்த்தை நங்கையே யிருந்திடுவாய்
கொன்றையோன்பாதம்காணகோரிபோகுறேன் வேறுபேசாதே ஆ

சண்டிகை கவி

என்னுரைதட்டியேயும் ஏகியேசெல்வேனென்று
பன்னியேசொல்வதாலே பாமனைசடுதிகண்டு
வண்ணமாய்எனதுமுன்னே வந்துமேசேரவேண்டும்
பின்னமாயிருக்கொணாது பிழையின்றிவருகுவாயே.

வசிஷ்டர் வசனம்

அப்படியே சீக்கிரம் வருகிறேன் குழந்தையுடன் பத்திரமாக யிருப்பாய் மாதே.

வசிஷ்டர் சிவனைக்காண செல்வது தரு

கைலாசமலை தன்னைகாணவே வசிஷ்டமுனி
கடுகிஎழுந்து ஓடிவாராரே ஞானமுனியும்கடி
ஆதிசிவனை என்றுமே வாயினால்சொல்லி
அருமுனிவர் நடந்துவாராரே அரனைக்காண அரு

மங்கைபார்வதி நாதன் தன்னையே கண்டிட முனி
மகிழ்ந்து நடந்து ஓடிவாராரே முனிநாதரும்-மகி

வெள்ளியங்கிரி தன்னை கண்டாரே வேதமாமுனி
வேண்டிப்பணிந்து அடியில்விழுந்தாரே கை

## விருத்தம்

கைலையின் சாரல்வந்தே தன் கருத்துடன் சிவனார் தன்னை
ஓயிலாக துதித்தநாளும் உண்மையாய் தபங்கள் செய்து
மயிலானசத்திபாகன் மலரடி காணவென்று
நயமுடன் சிவனேயென்று நான் துதிசெய்குவேனே.

## தபம் தரு

திங்களணிந்திடும் கங்கைசடாதரனே ஓமகாதேவா
தேவதேவனே வந்து ஆளுவாய்

மங்கைபார்வதியை இடத்தில்வைத்தவனே ஓமகாதேவா
மான்மழுவதும் கையில்பிடித்தவனே

காலன்பூமியில் விழவுதைத்தவனே ஓமகாதேவா
கபாலசூலமும் காண அணிந்தவனே

மார்க்கண்டன்றனை மகிழ்ந்துகாத்ததுபோல் ஓமகாதேவா
மாமுனிஎனை வந்துகாத்தருள்வாய்

## வசிஷ்டர் வசனம்

ஏ அரஹர கைலாசவாசா! திரிநேத்திரா! சூலகபாலத்தி! இன்னும் ஏழையின்மேல் மனதிரங்கவில்லையா? சீக்கிரம் மன திரங்கிவந்து அருள் தாரும்.

(பத்தாலதராசிங்கம் என்ற மெட்டு)

## வசிஷ்டர் தரு

சம்போசிவசங்கரா சந்திரசடாதரனே
நம்பினேன் என்முன்வந்து நாதா வேதா நீதான்தாரும் சம்

உம்பர்க்குகந்தநேசா உலகம்புகழும்ஈசா
வம்பெந்தன் மீதில்வந்து வாரும் காரும் தீரும்வினையை சம்

நந்திமீதேறும்தேவதா நாயேனைக்காக்கவாதா
வந்துயெந்தன் முன்நேரும் வரமே தருவாய் பரமசிவமே சம்

அத்தியுரித்தணிந்தாய் அம்பலந்தனில்நடித்தாய்
பத்தன் கோவிந்தசாமி பாட வாழும் நீயேயளித்தாய் சம்

## பொது வசனம்

இவ்விதம் தவம்புரிந்த வதிஷ்டர்முன் பரமசிவம் வந்து சொல்வது.





## பரமசிவன் கவி

பத்தர்க்குபத்தனாகி பாமரற்கரிதிகற்ற
எத்திசைபுகழ்ந்துபோற்றும் என்னரும்வதிஷ்டர்வாழி
சுத்தமாய்பெண்டுபிள்ளை சுகமதைவிடுத்தேயிங்கே
கர்த்தனாய்என்னவேண்டும் காரணமுரைசெய்வாயே.

## வதிஷ்டர் துதி தேவாரம்

கதிர்மதியாய் அனலாகி புனலுமாகி
 கார்ப்பாகி உவர்ப்பாகி கசப்புமாகி
மதுரமொடு புளிப்பாகி மணமுமாகி
 மாசில்லா தனுவாகி கோபமாகி
பதியாகி பசுவாகி பாசமாகி
 பண்பான ஆணாகி பெண்ணுமாகி
அதிவிதமாய் குருவாகி குற்றம்நீக்கும்
 ஆனேவுன் திருதாளில் அடியேன்போற்றி.

வசனம்

ஏ பரமக்கடவுள்! ஆ என்னயிது? இதுவல்லோ இன்பம், இன்றல்லோ நான்.

(ஐயா பழனிமலை வேலா என்றமெட்டு)

வசிஷ்டர் தரு

கண்—கண்டேகலிதீர்ந்தேன் யீசா உன்
கருணைப்பதமே நேசா உல்லாசா
கொண்டேயிருக்க வாசா பிரகாசா
கொடுக்கவேணடும் தாசா என்கண்ணால் கண்

பரமசிவன் தரு

என்—அன்பாயுமிக வாரும் வேண்டும்
ஆசைவாமேதாரேன் பாரும் நீரும்
இன்பங்கொண்டேனதனை தாரும் நீ
ஏற்றுசத்தியமதே கூறும் சீரும் அன்

வசிஷ்டர் தரு

ஆ—என்னால்தருவதது என்றே அதை
எடுததுரைப்பாய முன்னே சத்தியம்
சொன்னேனிதுவே கனுே நீரும்
சோதிக்காதீர் வணுே உனக்கென்

பரமசிவன் தரு

மிக—சோதிக்கவில்லையேநான் உன்னை யீதோ
சொல்லுகிறேன்பார் முன்னே ஒரு
மாது தருகவேணும் தனனை நீ
மகிழ்ந்துகொணர்ந்துவா என்னை அப்பா சே

வசிஷ்டர் கவி

என்னைசோதிக்கின்றீரோ ஈசனே அடியேன்போற்றி
அன்னைபார்வதியாள்தானும் அருகினிலிருக்கும்போது
கன்னியாள்வேண்டுமென்று கழறுவதேனோசுவாமி
நன்னயமாகநீரும் நானறிந்திடச்சொல்லுவீரே.

பரமசிவன் கவி

வேயல்முனியேகேளும் நிலமதில்சென்றுசத்தி
காயமாய்ஜெனிக்கவேண்டி காரியமிருப்பதாலே

ஆயிரம்பேரைக்கூடி அவளும்பத்தினியதாக
நீயுமேபார்த்துதந்தால் நினைத்ததைதருகுவேனே.

பரமசிவன் வசனம்

ஏ வதிஷ்டரே! பார்வதா பூமியில் செல்லவேண்டி யிருப்பதால் நீ சென்று ஆயிரம்பேரை கூடியவளாகவும், அல்லது ஆயிரம் குற்ற முள்ளவளாகவே இருக்கவேண்டும், அவளும் அழியாதவளாகவும் பார்த்து தந்தால் நீ கேட்கும் வரம் தருவேன் அப்படி உன்னால் முடியாவிடில் வரம் தரமுடியாது.

வதிஷ்டர் தரு

முடியுமா சுவாமி முடியுமா என்னால்
முடியுமா அரிவைதேட கடையவன் எச்சனலிப்போ
விடையிலேறும் யீசனுரே அடவுடன்சோதிக்காதீர்தீர் மு

பரமசிவன் தரு

தாருமே பெண்தான் தாருமே நீதான்
தாருமேஉலகில்பார்த்து நீருமேநான்சொன்னப்போலே
பாருமே தருகாவிட்டால் சீருடன்வரம்நான்தாரேன் தா

வதிஷ்டர் தரு

நீதியா சுவாமி நீதியா இது
நீதியா நீசொல்லுவது பாதகன் எங்குநான்செல்வேன்
ஆதரவாய் என்னைகார்த்து அன்பினால் வரமேதாரும் நீ

பரமசிவன் தரு

கேளுமே நீதான் கேளுமே இதை
கேளுமேநான்சொன்னதைப்போல் நாளுமேபெண்தாராவிடில்
மீளவேவரம் நான்தாரேன் மேதினியில்சொன்னேனுனே கே

வதிஷ்டர் கவி

அரஹராகைலைவாச! அம்பலத்தாசமீதில்
சரியுரிபோர்த்தவேதா கன்னியைதேடிநானும்
திரமுடன்செல்லுகின்றேன் சிவனேஉன்னருளினாலே
சரியுடன்எட்டுநாளில் தான்கன்னிகொண்டுவாரேன்.

பரமசிவன் வசனம்

அப்படியே தேடி எட்டுநாளில் பெண்கொண்டுவா வரம் தாரேன்

## வதிஷ்டர் தரு

சிவபெருமான் சொன்ன சேதியைகேட்டுமே எழுந்தேனே
சீரான பெண்ணதைதேட சத்தியலோகம் நடந்தேனே

கவனமா யான்சென்ன கன்னியில்லையென அறிந்தேனே
கண்ணபிரானைகர்த்தன் வாழ்பிடம்நானும் தொடர்ந்தேனே

அண்ணல் அரவ சயனமதை கண்ணால்கண்டனே
அரிகரியென்றே அடியிணையில் விழ்ந்தெழுந்தேன்தானே

பெண்ணெங்குநாம்தேடிபெருமானுக்களிப்போமென்றேங்கினேனே
பேருலகமெல்லாம் ஓடிதேடி பின்னும் அறியேனே சிவ

## பரமசிவன் தரு

ஐம்பை - தாளம்

என்னசெய்வேன் யீஸ்பரனே எங்குந்தேடி அலைந்தேனே
கன்னியொன்றைகாணிலேனே யிந்தகாரணத்துக்கென்செய்வேனே

கணவன்வருமுன் கன்னிகள் கள்ளபுருஷரைக்கூடி
குணமுடையகுழந்தைபெறும் கோதையரனேகம்கோடி

மாங்கல்யமிழந்தமாது மன்னர்களைத்தான்கூடி
இங்காரகருக்களிக்கும் தேவியுண்டுமிககோடி

புருஷரைதான் ஏமாற்றி பூமியில்மற்றவரைக்கூடி
தரைதனிலேசிசுவைபெறும் தையல்கண்டேன்வெகுகோடி

சங்கரனுர் வுரைத்தபடி கையல் காணேன்புவிமீது
எங்குசெல்வன் யானறியேன் ஏகிவீட்டிலமர்ந்தேன்வாது என

## பொது வசனம்

இவ்விதம் சிவபெருமான் சொன்ன பெண்கிடையாமல் வீட்டில் வந்து வதிஷ்டர் விசனமாக அமர சண்டிகைகண்டு சொல்வது.

## சண்டிகை கவி

எந்தனின்னாதாநீரும் ஏகியேமூன்றுநாளில்
வந்துமேசேர்வேனென்று வார்த்தையுமுரைத்துசென்று
இந்தநாளோடெட்டு எழில்பெருநாளுமாகி
விந்தையாய்வந்துநீயும் விசனமாயிருப்பதேனோ.





(சோமசேகரனருளும் பாலா வேலா என்றமெட்டு)

சண்டிகை தரு

நாதனே யெந்தன்மேலேனோ வாது வாது உமக்கு
நானிலத்தில் வந்ததென்ன ஓது ஓது

வசிஷ்டர் தரு

ஓதுவதாலென்னபயன் உண்டு உண்டு மாதே
உனக்கேனிதை காணவம்பு கண்டு கண்டு

சண்டிகை தரு

உமக்குவந்தகஷ்டமெனக் கல்லோ அல்லோ நாதா
உரைத்தாலதை யறிந்துவழி செல்ல செல்ல

வசிஷ்டர் தரு

வம்புசெய்யவேண்டாமெந்தன் மானே மானே அந்த
வார்த்தை யுன்னாலாகிடாது தானே தானே

சண்டிகை தரு

என்னுயிர் தந்தாகிலும் நான் கார்ப்பேன் கார்ப்பேன் அதை
எடுத்துரைப்பாய் நீயுமதை பார்ப்பேன் பார்ப்பேன்

வசிஷ்டர் தரு

ஈசன்சொன்ன வார்த்தையடி கண்ணே கண்ணே யிங்கு
யெடுத்துசொல்லமனம்வல்லையே பெண்ணே பெண்ணே

சண்டிகை வசனம்

பெண்சாதி மந்திரியை யொத்தவன் ஆ[illegible]த்தைசொல்லி பதில் தெரியலாம் என நீதியிருப்பதால் தோஷமில்லை சொல்லும் நாதா.

### வதிஷ்டர் கவி

போயுபேசிவனுரின்தன் பொன்னடிகண்டபோது
ஆயிரம்பேரைக்கூடி அவளுமே அழிவில்லாத
சேயிழையாசகொண்டு சிவனுமே தருகச்சொன்னார்
நேயமாய்தேடினானும் நேரிழைகாணவந்தேன்.

### சண்டிகை கவி

நாதனைவுமக்குசொந்த நங்கைநானிருக்கும்போது
வாதனையடையலாமோ வஞ்சியாயிரம்பேருக்கு
போதனையொன்றுதானும் பூமியில்குறைவதாலே
நீதனேயிருப்பாயிங்கே நேரிழைகூடிவாரேன்.

### வதிஷ்டர் தரு

மாதேவுரைத்ததென்ன வாது மிகநீது
மங்கையேயுரைப்பாயிப் போது நீ ஓது

### சண்டிகை தரு

வேதாதொளாயிரம்கொண்ணூரே கேளும் நேரே
வேணதொன்பதுஆச்சே பாரே ஒன்றுசீரே

### வதிஷ்டர் தரு

பரிகாசவார்த்தைதனேயாடி மாதே அழகோதே
பாரினுரைக்கிறாய்நீ வாதே யிப்போதே

### சண்டிகை தரு

கைகுழந்தையைபிடி யிந்தா இதோ வந்தேன்
கணக்காயிரமாகும் சேர்ந்தா ஒன்று சேர்ந்தா

### சண்டிகை கவி

பிள்ளையைபிடித்தாலிப்போ பிழையுடன்குறையுமொன்று
கள்ளமில்லாமல்சேர்ந்து கன்னியும்வருகிறேனுன்
சள்ளையென்உந்தனுக்கு சங்கரன்உரைப்போலாகும்
உள்ளமும்அழியாவந்த உத்தமிவுனக்குநானே.

### வதிஷ்டர் கவி

சண்டிகைகுழந்தைதந்து கையலாள்செல்லாயிப்போ
கொண்டதோர்குழந்தைதன்னை கொப்பெனகீழேபோட்டு
மண்டலந்தன்னில்வந்த மாபாவிதன்னைக்கூடி
தொண்டனுயிருந்ததோஷம் தொலைந்திடமுனிசென்றாரே.

## பொது வசனம்

இவ்விதம் சண்டிகை குழந்தையை வதிஷ்டரிடம் கொடுத்து இன்னும் ஒரு புருஷரை சேர்ந்தால் ஆயிரமாகுமெனச்சொல்ல வதிஷ்டர் உடனே குழந்தையை கீழேபோட்டு இந்த மாபாவியை கூடிய தோஷம் துலையவென்று காசிநோக்கி செல்லுகின்றார் என்பதாம்.

(பாபஞ் செய்யாதிருமனமே என்றமெட்டு)

## வதிஷ்டர் தரு

ஆஹாரபரமேசாநாதா　　　　இந்த
　　அரும்பாவிதனைப்போலும்　　　　இனிவுண்டோவேதா
திரிபுரதகனனேநீதா　　　　இந்த
　　திங்கள்கங்கைசூடி　　　　சிங்காரபாதா　அர

ஆயிரம்பேர்தனைக்கூடி　　　　மிக்க
　　அன்புள்ளவளைபோல　　　　அவனியில்பாடி
சேயிழைதனை னுடன்நாடி　　　　என்றும்
　　தெரியாதிருந்தேனே　　　　சிவசிவாஓடி　அர

மாபாவந்துலைந்திடுமய்யா　　　　உந்தன்
　　மலரடிதுதிதந்தனே　　　　மனம்வைத்தாள்மெய்யா
காபந்துநீயனறிம்யது　　　　எனை
　　காக்காவிட்டாலினி　　　　துணையில்லைஇது　அர

காசிகோபுரமிதோகண்டேன்　　　　துணை
　　கதிரியெனதேவனை　　　　சரணமுங்கொண்டேன்
நேசகங்கைஸ்நானமசெயதேன்　　　　நீ
　　யேவலமுடன்　　　　பூசையுமுய்தேன்　அர

காசி விஸ்வநாதரை நினைத்து மண் அள்ளல

## வதிஷ்டர் கவி

காசிவாழ்நாதாநான்தான் கணக்கிலாபுருஷர்சேர்ந்த
வேசிமைச்சேர்ந்ததோஷம் விலகிடவுனை துதித்தேன்
பாசமாம்பசிக்காயிங்கு பாங்குடனமண்ணையள்ளி
ஆசையாய்முடிந்தேன்தை ஆககினுலஉணபேன்தானே.

## பொது வசனம்

இவ்விதம் விஸ்வநாதரை துதித்து உத்தமியைக் கண்டு மணம் செய்துக்கொள்ள எண்ணி மண்ணையள்ளி முடிந்து இதை சமைத்தால் உத்தமியென, காணலாமென செல்ல அப்போது வீரசாம்பன் வருவது.



### வீரசாம்பன் வருகிற கவி

கொம்பதுதோளில்மாட்டி குத்தியேசெருப்புதைக்கும்
சம்பிரமசாமானெல்லாம் தடபுடலாகக்கொண்டு
அம்புவிதன்னிலகண்டோர் அதிவீரனெனவேபேச
வம்பிலாவீரசாம்பன் சக்கிலிவருகின்றானே.

### வீரசாம்பன் தெம்மாங்கு தரு

தன்னானே தானனன னானே தானேனே தானன்னே

வீரசாம்பன் சக்கிலிநானிதோ வேடிக்கையாய்வந்தேனே தான்
பாரமுள்ள கொம்புதாங்கிநல்ல பக்ஷமுடன்வாரேன் நேராய்—த

சிராணகச்சைகட்டிபட்டு சிறந்ததலைப்பாகையிட்டு
பேரானஜோடுமாட்டிதானே பேசிமிகவந்தேனெட்டி த

கன்றுறிப்பேன் கோலெடுப்பேனதை கணக்குடன்பதனிடுவேன்
நன்றானசெருப்புஜோடு னைடாயநானதைப்பேன்ஷோக்காகதான்

இடுப்புபிலுட்டுகளும்நல்ல இஷ்டமுள்ளவடக்கயிறு
முடுக்குடனதைத்திடுவேன் குதிரைமுக்கியநல்சாமானகளும்

கொம்பூதிநான்கூத்தாடுவே னுண்டைகூறும்படிநானடப்பேன்
நம்பியெதானமாடுகட்டுவைத்தியம் நல்லாசெய்வேன்பூமியிலே த

### வீரசாம்பன் கவி

ஊத்தானேவீராமாடா கருப்பனேநீங்களோடி
சேதியாய்பெருமல் பெத்தபின்னையமகளுமான

சீர்த்திசேரருந்ததியை சீக்கிரமழைத்துயிங்கே
பார்த்திடவருகுவீரே பாவையைக்கொண்டுதானே.

பொது வசனம்

வீரசாம்பன் சக்கிலி அருந்ததியை யழைக்க வருவது.



## அருந்ததி வருகிற கவி

தந்தையாரழைத்தசேதி தையலும்காதில்கேட்டு
விந்தைசேர்பணிகள்பூண்டு வெகுவிதமலர்கள்சூடி
இந்தணிகாதனுன யீசனை துதித்துப்போற்றி
அந்தார்மகிழ்ந்துபேச அருந்ததிவருகின்றாளே.

தரு

அகிலம்புகழுல்லாசி மிகவதனப்பிரகாசி
அருந்ததிமாதுவந்தாள் தந்தையின்பக்கல்
ஜெகமதில்கண்டவர் தேவிரதியோவென்ன அ

சுருள்

சித்திரவேல்விழி உத்தமிமாது
பத்தியாய் உலகினில் மெத்தவும்சாது அ

காலில் அணிந்ததண்டை கீதம்கலகலென்ன
மேலும்பணிகள் பூண்டு மெல்லியருடன்கூடி

சுருள்

மெத்தவேதந்தையும் இத்ததியெந்தனை
உத்தமாழைத்ததை சித்தமாயறிந்திட அ

அரனின்பாதத்தைபோற்றி ஆசைமலர்கள்சூட்டி
திரமுடன்மையதை செல்விழிக்கே தீட்டி

சுருள்

சீருளவுலகினில் பேர்பெருமைதயல்
நேரிலாநற்குண பாரினில் துதிஒயில் அ

உத்தமியிவளென்று உலகமெங்கும்மகிழ
பத்தன்கோவிந்தனும் பார்தனிலேபுகழ

சுருள்

பாடியேஆடிடும் ஈடிலாபுலவர்
கூடிடுபிழையதை தேடியேநீக்குவர் அ

அருந்ததி தரு

வந்தனம்தந்திட்டேன் தந்தையரே
வருகவழைத்ததை முந்திவுரை

வீரசாம்பன் தரு

வாழிவாழி மகராசியதாய்
வையகத்தில் வெகுகாலமேலாய்

அருந்ததி தரு

சந்தோஷம்கொண்டேனே எந்தனையும்
சடுதியழைத்ததை நீயுரையும்

வீரசாம்பன் தரு

அம்மணிஇந்தசிறு பருவம்
ஆசையென்னசொல்லுவாய் தருவம்

அருந்ததி தரு

சொன்னாலென்னெண்ணம் தருவீரோ
என்னைவைதுமிக நோவீரோ

வீரசாம்பன் தரு

சிறுவருடன்நீ விளையாட
சிரணசாமனே வேண்டும்நாட

அருந்ததி தரு

வீண்காலம்போக்கும் விளையாட்டு
விட்டேனதனைமிக பார்த்து



### வீரசாம்பன் தரு

கன்னிபருவம் தனக்கேற்ற
கணவன்வேண்டுமோதான் சொல்பார்க்க

### அருந்ததி கவி

நாதனுரெண்ணமில்லை நானிலமீதிலீசன்
போதவேபதத்தைக்காண பூவையும்பூசைசெய்து
காதலாய்தவங்கள்செய்ய கன்னிக்குமடங்கள்கட்டி
ஆதரவாகத்தந்தால் ஐயனேபோதும்தானே.

### வீரசாம்பன் தரு

கண்ணேயிதுவென்ன பேச்சு உந்தன்
கன்னிபருவத்தில் சீச்சீ
மண்ணுள்ளோர்புகழ்ந்திடும் மாபொருளைத்தேடி
நண்ணுகயிருந்தாலே நாடுவார் நமைத்தேடி

### அருந்ததி தரு

பொருளென்னும்பேயதை நாடேன் அது
பொருந்தாதொருவிடம் கூடேன்
கருணையுடன் பந்து கைப்பொருளிருந்தாலே
தருணமற்றுவிட்டால் தானோவென்பார்கள்

### வீரசாம்பன் தரு

கண்ணிறைந்த புருஷன் தானே
கண்டுமணஞ் செய்வாய் தேனே
எண்ணியவயது ஈரெட்டுமாச்சுதே
விண்ணிலும் புகழ்ந்திட விதமாயிருப்பாயே

### அருந்ததி தரு

இரத்த சத்துமுள்ள மட்டும் என்னை
எல்லோரும் புகழ்வார்கள் கட்டும்
அத்துபிரிந்தாலே ஐயையோ அது துன்பம்
மெத்தை அது தானே மெல்லிக்கு வேண்டாமே

### வீரசாம்பன் கந்தார்த்தம்

ஈசனைக்கண்டுநீயும் இனிதுடனிருக்குங்காலை
பாசமாய்புருஷர்மீதில் பந்தமாமிச்சைபற்றும்
ஆசைநீகொண்டாயானால் அத்துடனழிந்துமிக்க
நேசனல்லருளுநம்நீங்கி,

### வீரசாம்பன் தரு

நீ கெடுவாயே உன்னெண்ணங்கள்
தான் விடுவாயே
மேவிடு பருவத்தில் மெல்லி கணவனுடன்
கூடியிருந்தால் பின்னால் கோரிபதம்பெறலாம்

### அருந்ததி கந்தார்த்தம்

எந்தநேர்நீதிகள் தான் எடுத்துமேசொன்னபோதும்
தந்தையேகொள்ளேனும் தரணியில்காமியாகி
பந்தமாயிருந்தால்எமன் பாசத்தில்கட்டியன்று
தொந்தரை செய்துதானே,

### அருந்ததி தரு

தூக்கியேயெறிவான் நரகந்தன்னில்
தாக்கியே யெறிவான்
நோக்கிமனம்வைத்து நூதனமடம்தாரும்
சீக்கிரமருள்கண்டு சிவனிச்சைமணம்செய்வேன்

### அருந்ததி வசனம்

இப்போது மடம்கட்டித்தந்தால் சிவபெருமானைபூசித்து, பின் கடவுள் இச்சைப்படி மணம் செய்துக்கொள்ளுகிறேன் தந்தையே.

### வீரசாம்பன் கவி

உன்னிட்டமனைதைப்போல உத்தமிமடங்கள்கட்டி
நன்னயமாகத்தந்தேன் நாடிநீயிருந்துயீசன்
தன்னிட்டபதத்தைக்கண்டு தையலுன்மனைதப்போல
வன்னமாநாதன்கண்டு வணைகயுடன்பணஞ்செய்வாயே.

### பொது வசனம்

இவ்விதம் அருந்ததி மடத்திலிருந்து சிவனைப் பூசித்து வருங் காலத்தில் வதிஷ்டர் காசியில் எடுத்த மண்ணை யாரும் சமைப்பவர் கிடைக்கவில்லையென்கிற கஷ்டமுடனும் பசியுடனும் கானகமார்க் கம் வரும்போது மடத்தைக் காணுவது.

### வதிஷ்டர் தரு

ஓடிதேடிவந்து நாடியுன்பாதங்கண்டேன் சங்கரனே
வாடும்என்பாவம்நீக்கி கடவுளுன்னருள்தாரும் சங்கரனே
காசிதேசம்காணநேசமாய் வந்தேன் சங்கரனே
ஈசனேபசியென்னை எங்கிடச்செய்யுதே சங்கரனே
விண்ணுளோர்புகழ்ந்திடும்விமலாவுன்சன்னதி சங்கரனே
மண்ணைசமைத்துதந்தால்மாதேவாநானுண்பேன் சங்கரனே
நொந்துவந்துயிந்த நூதனமடம்கண்டேன் சங்கரனே
சுந்திரமாதிதை சோறுகத்தருவாளோ சங்கரனே

### வதிஷ்டர் வசனம்

இதோ மடம்கண்டேன் இதில் இருக்கும் மாது இது சமைத் துத் தருவாளோ அப்படி சமைக்கும் உத்தமியை தவறாமல் மணஞ் செய்துக்கொள்ளுவேன் சிவமே.

### வதிஷ்டர் தரு

(பாபஞ்செய்யாதிருமனமே என்ற மெட்டு)

அாஹரசிவசிவ சம்போ எந்தன்
அரும்பசிக்கன்னமளிப்பீரோ அம்மா
திரிபுரதகனின்னருளோ பசியால்
ஜீவனும்வாடுதே செய்வதே தறியேன் அா

பாலும்பழமும் நான்வேண்டேன் நல்ல
பலகாரப்பச்சிடி பயர்சாதம் வேண்டேன்
மேலும்நான் உண்டிடசாதம் மிக
மேதினியில்தந்தால் போதுமே நீதம் அா



அருந்ததி தரு

பிச்சையென்றே யிங்குகேழ்க்கும் உச்சிதமுனிவோரே
வாரும் மிக வாரும்
இச்சையானசாதம்தர எந்தைகோசிகசாதி
தானே சொன்னேன் தானே

வசிஷ்டர் தரு

ஆணும்பெண்ணும்சாதியன்றி காணும்சாதி எல்லாமிது
சூது மகா சூது
வேணசாதியாகமுன்னம் வேதவியாசன் பிரித்தார்
நீது இது நீது

அருந்ததி தரு

கன்றுதோலைகொண்டுமீறி இன்னபடிதைத்திடும்
சாதி எந்தன் சாதி
நன்றல்ல உனக்குசாதம் இன்றளிக்க ஆகாதிது
மாது சொன்னேன் மாது

வசிஷ்டர் தரு

எந்தனின் மனதுவொத்தால் குந்தமதிலுமுண்டோ
தாரும் சாதம் தாரும்
இந்தணிந்தோன் சூதோபசி இந்தவேளை கொல்லுதென்னை
பாரும் எனைப் பாரும்

### வசிஷ்டர் கவி

சாதிகளெல்லாமிங்கு சதுர்முகனொருவனன்றி
நீதிதுவெனவெவ்வேறு திசைமுகன்படைக்கவில்லை
மாதேயென்மனதுவொத்தால் மர்மமேமன்உந்தனுக்கு
போதவேசாதம்தந்தாற் புகழ்பெறவாழ்குவாயே.

### அருந்ததி கவி

குறையறக்கல்விகற்று கூத்தனார்பாதங்கண்ட
மறையவரானசுவாமி மங்கையும்சாதம்தானும்
திறமுடன்சமைத்துவேண சீர்பெருகறிகளோடு
பரிவுடன்தந்தேன்பெற்று பாங்குடனுண்ணுவீரே.

### வசிஷ்டர் தரு

இந்தசாதம்வேண்டாம் . இன்பகுணமுள்ளமாதரசே
விந்தைசேர் மண்ணிதைவிதமாய் சமைத்துதாருமாதரசே

### அருந்ததி தரு

திங்கள்கங்கைசூடும் சங்கரனைப்போற்றும் முனிநாதா
மங்கைநானெப்படி மண்ணை சமைப்பது முனிநாதா

### வசிஷ்டர் தரு

உண்மைமனமுள்ள வுத்தமி மனம்வைத்தால் மாதரசே
நன்மையாய் சமைத்தால் தாமேசாதமாகும் மாதரசே

### அருந்ததி தரு

ஈசனருள்போற்றி எடுத்தேனே மண்ணிதை முனிநாதா
நேசமாய்சமைத்து நிமிஷத்தில் வருகிறேன் முனிநாதா

### அருந்ததி மண்ணை சமைப்பது

### தரு

சிவசிவாசிவனேஎன்று அம்மன் சிந்தையிலெண்ணியேமண்ணதனை
கவனமுடனெடுத்து அதை கன்னிசமைத்திடத்தானடந்தாள்
உத்தமிநானே ஆனலிது உண்மையுடன் சாதமாகவென்று
பத்தினிசமைத்திடவே அப்போ பாங்குடன்சாதமாய் ஆகியதே-சிவ

### அருந்ததி கவி

சாதமுமாச்சி சங்கரனருளால்
போதமாய்வுண்ணும் புண்ணியமுனியே

### வதிஷ்டர் கவி

மாதாசேநான் மகிழ்ந்து மூந்தாணி
நீதமாய்நீட்டினேன் நீதிருவாயே

### வதிஷ்டர் கந்தார்த்தம்

மண்ணைச்சாதமாக்கி மானிலமீதிலெலந்தன்
கண்முன்னே தந்துகாத்த கற்பினில்மிகுந்தமாதே
இன்னமேன்சாலந்தானோ இச்சையாய்மணங்கள்செய்து
வண்ணமாயிருக்கலாகும்,

### வதிஷ்டர் தரு

வாடிநீ மயிலே வாய்மொழியொன்று
தாடிநீ குயிலே

மோடிசெய்யாதே நீ போகம்பொல்லாதடி
கூடியிருந்திட்லாம் கோதையே மணம்வைத்து வா

### அருந்ததி கந்தார்த்தம்

அறிவினில்மிகுந்தோரென்று அன்புடனிருந்தேன்காம
வெறியனீயென்றுஇப்போ விபரமதாகக்கண்டேன்
சரிசரிமடத்தைத்தாண்டி சடுதியில்வெளியில்தானே
பரிவுடன்ஏகிமிக்க,

### அருந்ததி தரு

பாவிநீசெல்வாய் ஏடாகூட்டம்
கூவிடா செல்வாய்

மேவிடா திருந்துமே மெல்லியைவைதாலே
ஆவியேகுமெந்தன அப்பனிடம்சொன்னால்

### வதிஷ்டர் தரு

(பாசுபதம் போலேமதன் பாணம் தைக்குதடி என்றமெட்டு)

உத்தமியே பத்தினியே உருகிறேன் மானே-மனம்
கருகியே தானே உந்தன்
சித்தம் நீ இரங்கி தயை செய்குவாய் மானே

### அருந்ததி தரு

பித்துகொண்ட சித்தனேநீ பேசாதே போடா-மிக
ஏசாதே மூடா இங்கு
கத்தவுந்தன் வார்த்தையெல்லாம் காட்டாதே கேடா

வசிஷ்டர் தரு

எனை மணக்காவிட்டாலுயிர் இவ்விடம் விடுவேன்
இந்த பூமியில் கெடுவேன் மனம்
தனை யடக்கி உன்னிடத்தில் தானிதோ மடிவேன்

அருந்ததி தரு

இந்தமதி வந்ததென்ன ஏகுவாய் நாயே வீணாய்
சாகுராய் நீயே வித்தை
தந்திரங்கள் கற்றுவந்து நோகுராய் சீயே

வசிஷ்டர் கவி

திங்களின் ஒளிவின்மாதே சீர்மணஞ் செய்யேனென்று
பொங்கமாய இருப்பதாலே புவியிலென் னுயிரையிப்போ
சங்கான் தவனுணை சகமதில் வீழ்ந்துயிதோ
இங்ஙனம் உயிரைத்தானே இக்ஷணம் விடுகுவேனே.

பொது வசனம்

இந்தப்பிரகாரம் அருந்ததி விவாகஞ் செய்துகொள்ள மறுக்க வசிஷ்டர் கீழே விழுந்து இறப்பேனென மூர்ச்சித்து உயிர்விடும் சமயம் ஈஸ்வரன் வந்து தடுத்து சொல்வது.

பரமசிவன் கவி

என்னிட அன்பனே நீ எழுந்திரும்வந்தேன்வந்தேன்
கன்னியாமருந்ததியை கருத்தைப்போல்மணக்கள்நானே
வண்ணமாய்செய்துவைப்பேன் வருத்தம்பேடுகவேண்டாம்
இன்னும்வேண்டியவையெல்லாம் இப்பவேகேழ்ப்பாய்தானே.

வசிஷ்டர் கவி

அப்புடன் மதியணிந்த அரனேயுன் பாதந்தன்னில்
இப்பவே வசிஷ்டனானும் இன்பமாய் பணிந்திட்டேனே.

அருந்ததி கவி

ஐமைப்படி கன்னியான மகேஸ்வரி ஈசாவுந்தன்
பொற்புள பாதந்தனில் போற்றினேன் போற்றினேனே.

பரமசிவன் கவி

அருமைசேர் வசிஷ்டாவுன்னை அவனியில் துதித்துமிக்க
பெருமைகளாகநானே பேர்பெற செய்வேனிப்போ
தருமனால் நெறியைக்கொண்ட தையலே வாழிவாழி
மருமமில்லாமலிப்போ மணஞ்செய்து வைப்பேனானே.



## பரமசிவன் வதிஷ்டருக்கும் அருந்ததிக்கும் கல்யாணம் செய்துவைக்கும் தரு

| | | |
|---|---|---|
| கல்யாணஞ் செய்தாரே | வதிஷ்டருக்கு | கல் |
| கல்யாணஞ்செய்தாரே | கன்னியருந்ததியை | |
| எல்லாதேவரறிய | ஈசன் உமையிருந்து | கல் |
| நான்குகால்கள்வேதம் | நவிலும்கிளை விலக்கு | |
| வான்புகழ் இந்திரன் | வன்னி குடவிளக்காய் | கல் |
| தருமதருமமறியும் | காலன்புரோகிதனாய் | |
| நிருதிபெண்தோழியும் | வருணன்வதிஷ்டர் துணை | கல் |
| வாயுமாப்பிள்ளை தோழன் | வடதிசைகுபேரன் | |
| கேயவிவாக கர்த்தா | வாகுநிற்கவைத்து | கல் |
| வடகிழக்குமூலை | வைக்க அம்மிகுழவி | |
| இடமாயீசானமூர்த்தியை | தெரிந்து இருக்கவைத்து | கல் |
| நவக்கிரகங்களை | நவதானியமாய்வைத்து | |
| தவசப்தரிஷிகளை | தான்கரகமாய் வைத்து | கல் |
| சப்ததீர்த்தங்களை | சாலுங்கரகமாக்கி | |
| மெய்யுடன் திரிமூர்த்தி | மேன்மை அரசாணியாய் | கல் |
| ஓமம் நிறைவேற்றி | உயர்ந்த கங்கணம்சாற்றி | |
| ஆன்மதத்துவமென்ன | அருமைநூல் மாங்கல்யம்கட்டி | கல் |

### வதிஷ்டர் கவி

என்னிட மனதைப்போல எழுந்துமே விவாகஞ்செய்த
உன்னித பாதம்தன்னில் உகந்துமே போற்றினேனே.

பரமசிவன் கவி

நன்னய வதிஷ்டாவுன்னை நாளுமே எல்லாம்போற்றும்
வன்னநல் வரமேதந்தேன் வாழ்குவாய் வாழ்குவாயே.

அருந்ததி சந்தார்த்தம்

பாசயிப் பந்தம்நீக்கி பரமனே உனதுதாளை
நேசமாய் நினைந்துதானே நிற்குமிவ் வேளைதன்னில்
ஈசனே திருக்கூத்தாக எனக்குமே மணமும்செய்தீர்
தேசத்தில் பாயியாக

அருந்ததி தரு

திரியாமல் காப்பீர் என்னையுன்பாதம்
பெருமையாய்ச் சேர்ப்பீர்

வரிந்துபாசத்தால்யமன் வருந்தாமல்பூமியில்
அறிந்து அனைவோர்போற்ற ஆண்டவாவரம்தாரும்

பரமசிவன் சந்தார்த்தம்

உலகத்தில் நீயேயம்மா உத்தமியாகும் சொன்னேன்
கலக்கமே கொள்ளவேண்டாம் கற்பினில் உன்னைப்போலே
இலகிய தேவர்மற்ற எங்குமே இல்லைதானே
பலபலபேரும் போற்றி,

பரமசிவன் தரு

பாரினில் துதிப்பார் எந்நாளுமே
சீருடன் மதிப்பார்

ஆரும்துதித்திட அம்மணிவரம்தந்தேன்
பேரும்கற்புதன்னில் பேசவுனைப்போலுண்டோ

ஈஸ்வரன் வசனம்

அருந்ததி! உன்னைப்போல உத்தமி எங்குமேயில்லை. எக்காலமும் உன்னை துதித்து எல்லோரும் போற்ற வரமும் தந்தேன் வாழ்வாயாக. வதிஷ்டா! சுகமாயிரும் யாங்கள் சென்று வருகிறோம்.

பொது வசனம்

இந்தவிதம் பரமசிவம் அருந்ததியை உத்தமியென பார்வதியிடம் சொல்வது.



பார்வதி கந்தார்த்தம்

இந்தவிதம் பரமசிவம் கூறக்கேட்டு
    இன்பமுள்ள பார்வதியும் கோபங்கொண்டு
அந்தாரும் பூமியிலும் போற்றவென்று
    அருந்ததியை பெரிதாக கூறலாமோ
எந்தனுடன் லட்சுமி சரஸ்வதியிருக்க
    எங்களிலும் மேலாமோ யிவள்தானென்ன
விந்தையுடன் நீர்சொன்ன வரம்தானிது,

பார்வதி தரு

உண்மையரிதாமா    தேவதேவா
நன்மையோ    பாவா

உண்மையுடன் சொல்லதை உலகத்தில் அறிகின்றேன்
என்னமதியாலே    இந்தவரம் தந்தீர்

பரமசிவன் கந்தார்த்தம்

பார்வதியே யிதுவென்ன புத்திதானோ
    பாருலகில் உத்தமியு மானதாலே
சீருடனே எல்லோரும் துதித்து போற்றும்
    சிறப்புடைய வரமதனை தந்தேனானே
பேர்பெருகும் திரிமூர்த்தி பெண்டுயென்று
    பெரிய அகம் நீங்களுமே கொள்ளலாமோ
நீர்கூட உத்தமியு ஆகுமோதான்.

பரமசிவன் தரு

வில்லாதே மானே    உன்பேச்செல்லாம்
செல்லாது    தானே

பொல்லாது அகங்காரம் பூவையேகொள்ளாதே
நல்லதல்லதானே நானேவுரைத்தேனே

பரமசிவன் வசனம்

மாதே "தெய்வந் தொழாள் கொழுநனைத் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை" என்றபடி உத்தமி நம்மைவிட சொல் பலிக்கும்; பெய்யென்றால் மழையும் பெய்யும், ஆதலால்தான் உலகில் துதிக்கும் பெரிய நல்வரம் தந்தேன் பார்வதா!

பார்வதி தரு

உத்தமி யென்று சொன்னீரே ஓகோ அடையாளமுண்டோ
யீசா பர மேசா

மத்திப அவுசாரிக்கு மண்டையில் கொம்புதானுண்டா
யீசா பர மேசா

பரமசிவன் தரு

அவுசாரிக்கு கொம்புவரும் ஆகா அகங்காரம்கொண்டால்
தானே எந்தன் மானே

தவமியற்றும்ரிஷிதேவி தையலுக்கெதிருமுண்டோ
தானே எந்தன் மானே

பார்வதி தரு

இல்லையில்லை பெண்களுக்கு எப்பவும் கொம்புவருவ
தில்லை சொன்னேன் அல்ல

தொல்லையது உந்தன்சொல்லை தோகையேநான் கொள்ளுவது
இல்லை சொன்னேன் இல்லை

பரமசிவன் தரு

எந்தன்சொல்லை இப்பொழுது ஏந்திழையே நம்பவேண்டாம்
தானே எந்தன் மானே

தொந்தரையாய் யாருக்கேதும் தோன்றிவரில் நம்புவாய்நீ
தானே எந்தன் மானே

பரமசிவன் கவி

உலகினில்வுள்ளஜீவ உத்தமஜெந்துக்கெல்லாம்
பலபலவிதமாக படியதுஅளந்துவாரேன்
இலகியதோழியோடு ஈஸ்வரிஇருப்பாயிங்கே
கலகங்களின்றிநானும் கடுகெனசென்றுவாரேன்.

பொது வசனம்

இந்தப்பிரகாரம் பரமசிவம் படியளக்கும்பொருட்டு சென்றுவிட பார்வதி கைலாசத்தில் தோழியோடு விளையாடியிருக்க அப்போது இடையிலணிந்திருந்த பட்டானது தானாக டார்யென கிழிந்துவிட பரமசிவனுக்கு என்ன சொல்வது என பார்வதி விசனிப்பது.

பார்வதி கவி

நாதனார்சென்றபின்பு நங்கையென்தோழிமாரே
போதவேயிருக்குங்காலை புடவையுங்கிழியவிப்போ
தீதேதுசெய்தேனோனே தெரிகிலேன்மாசுமில்லா
நீதநற்சேலைதானும் நிந்தனையாச்சுதையோ.

வசனம்

ஆ என் தோழிகளே! என்றும் மாசுபடாத சேலையானது மாசுபட்டு கிழிய என்ன குற்றம் செய்தேனோ அறியேனே? பரம சிவம் வந்தால் என்ன சொல்வாரோ அறியேன் தோழிகளா.

பார்வதி புலம்பல் தரு

| | |
|---|---|
| என்னசெய்வேன் ஏதுசெய்வேன் | தாதிகளா அம்மா தாதிகளா |
| எனைப்பழிக்க காலமாச்சே | தாதிகளா |
| பின்னமில்லா சேலையிது | தாதிகளா அம்மா தாதிகளா |
| பின்னமாகிபேச்சுதிப்போ | தாதிகளா |
| ஈசன்வந்தால் என்னசொல்வேன் | தாதிகளா அம்மா தாதிகளா |
| எங்கிலும் எனைப்பழிப்பார் | தாதிகளா |
| மாசுபடா சேலையடி | தாதிகளா அம்மா தாதிகளா |

மகாதேவனுக்கென்னசொல்வேன் தாதிகளா

பொது வசனம்

இந்தப்பிரகாரம் பார்வதி அகங்காரத்தை அடக்கும்பொருட்டு சேலையை கிழியும்படிசெய்து பார்வதி அழுதுகொண்டிருக்குங்கால் ஈஸ்வரன் தையற்காரனாக ரூபமாறி அம்மன்முன் வருதல்.

தையற்காரன் கவி

சத்தியும் அழுதுநொந்து தனித்துமே யிருக்குங்காலை
அத்தியை யுரித்தணிந்த அரனவர் ரூபமாறி
கத்திரி ஊசிநூலும் கனமுடன் கையிற்கொண்டு
தைத்திடும் தையற்காரன் தானாகி வருகின்றாரே.



### தையற்காரன் தரு

மஞ்சள் கருப்பாக்கீச என்றமெட்டு

தையல்தைக்கும் கூலிநானே தான்வந்தேனே வையகத்தில்
ஐயமாரே அம்மமாரே ஆடைதைக்கவில்லையோதான்
கோட்டு ஷர்ட்டு ஜூப்பாக்களும் கைகுட்டை பனியன் கால்சட்டை
வாட்டமுள்ள பாஜிகவுன்நான வையகத்தில் வேலை செய்வேன்
நங்கையர் தனக்குகந்த நவிசகைகச்சை மற்றும்பல
இங்கிதமாய் தைத்திடுவேன் ஏழைபசி தாளேனையா
கண்ணிறைந்த பட்டுகளும் கந்தலபழைய துணியும்
விண்புகழ தைத்திடுவேன் வேலையது ஆகுதையோ
பிள்ளையுண்டு பெண்ணுமுண்டு பேருலகில் பந்துமுண்டு
கள்ளமில்லை என்னைகண்டு கனதுணிகள் தாரும்தைக்க
ஆலமுண்டோன் தன்னருளா அதிக பசியாகுதையோ
பாலன்கோவிந்தன்கவி இந்த பாருலகில் நீடிவாழ்க தை

### பார்வதி தையல்காரனைக்கண்டு சொல் கவி

ஆரையாதையற்காரா அன்புடனிந்தசேலை
சீரதாய்தைக்கநீரும் திரவியமென்னகேழ்ப்பீர்
கூறியேஅதனைப்பெற்று குவலயம்புகழயீசன்
பேரதாவருவதற்குள் பிழையின்றிதைத்துதாராய்.

### தையற்காரன் கவி

உந்தனைக்கண்டபோதே உருகுதென்மனதும்சித்தம்
பிந்தியோர்கூலிவேண்டாம் பிழையின்றிதைத்துதாரேன்
சுந்திரமானேதேனே தோகையேமனதுவைத்து
எந்தன்மேற்கருணைகூர்ந்தால் யிருவரும்கூடலாமே.

### பார்வதி தரு

விடமாட்டேன் விடமாட்டேன் என்றமெட்டு

சொல்லாதே சொல்லாதே சுத்தசத்தியானுகுமே சொல்
பொல்லாதகாலமோதான புடவைவண்ணம் வந்திடும்
நல்லபொருள்வாங்கியிதை நாடிதைத்துமேநீயேதாராய் சொல்

### தையற்காரன் தரு

அடங்காது அடங்காது ஆசைமேலசிலைமாரன்கணை அட
தடையேனோநீசொலகிறாய் தைத்துதாரேன் உடனேசேலை
விடைதந்தால்போதுமிதோ பின்னமின்றிதாரேன்கூட அட

### பார்வதி தரு

சிவசத்தி சிவசத்தி சீச்சீநானே சுத்த சிவ
அவமொன்றும் நீசொல்லாதே அரன்வருகும் நேரமாச்சு
கவனமதாய்தைத்துதந்தால் கனபொருள்களிதோதாரேன் சிவ

### தையற்காரன் தரு

ஏன்வாது ஏன்வாத் எந்தன்மீதி லுனக்கேன்வாது ஏன்
நான்தாரேன் தைத்துயிதோ நாடிகூடாவிட்டபோதும்
தான்கூடுகிறேனென்றுசற்று சொன்னால்போதும்போதும் ஏ

### பார்வதி கவி

உலகினில்உள்ளமாதர் உத்தமபுருஷனன்றி
கலகமாய்மற்றோர்தன்னை கருத்தினில்நினைந்தபோதும்
இலகியகற்பின்பங்கம் ஏற்பட்டுஎல்லாமேகி
விலகிடும்பாவியாகி வீணாகினில்வீழ்வாரே.

### தையற்காரன் கவி

கூடுவேன்என்றுநீயும் கூறினால்கற்புகெட்டு
கேடுகள்வருகுமென்று கெம்பீரம்சொல்வதாலே
வாடிடும்தையல்என்னால் வகையுடன்முடியாதிப்போ
நாடுறேன்என்னையிப்போ நவின்றுமேதடுத்திடாதே.

### பார்வதி தரு

தையற்காரன்போகவேண்டாம் சங்கரர்வந்தால் கோபிப்பார்
பையதைத்துநீயும்தாரும் பலபொருள்கள்தாரேன்

### தையற்காரன் தரு

தைக்கவெகு நாழியல்ல தான்கூடுவேனென்று நீயும்
மிக்கசொன்னால்போதுமிப்போ மேதினியில்தைத்துதாரேன்

பார்வதி தரு

இந்தணிந்தோன் இதோஇது உந்தனைநான்கூடுகின்றேன்
அந்தார் அறியொண்ணாது அவசரமாய்த்தைத்துதாரும்

வசனம்

இதோ பாரும் அறியப்பட்டது உன்னைக் கூடுகின்றேன் தைத்துதாரும்.

தையற்காரன் தரு

தந்தேனிதோ தைத்துநானும் சங்கரர் வருகுமுன்னம்

வசனம்

இதோ தைத்து தந்தேன் இரு வருகிறேன் நாழியாயிற்று.

பொது வசனம்

இந்தப்பிரகாரம் பரமசிவம் தையற்காரனாகி வந்து பார்வதியிடம் கூடுகிறேனெனச் சொல்லும்படி செய்து தைத்து தந்து போக உடனே பரமசிவம் வாக்குப்படி அம்மன் தலையில் கொம்பு காண பயந்து சொல்வது.

பார்வதி கவி

ஐயையோயென்னசெய்வேன் அரனிட்ருதுதானோ
தையலோன்சொல்லைப்போல் தானுமேகொல்லயிப்போ
பையவேசிரசின்மீது பாங்குளகொம்புஒன்று
மெய்யாகவந்ததையோ மெல்லியும்என்னசெய்வேன்.

பார்வதி புலம்பல் தரு

என்னசெய்வேனேதுசெய்வேன் எங்குசென்றுயாறொளிவேன்
இந்நிலத்து மங்கையெல்லாம் எனைப்பழிக்கக் காலமாச்சே

மாசுபடாசேலைபது மகிமையுற்றுதான்கிழிய
கூசிமனம் தையலோன்சொல் கூறிடயிவ்விதியாச்சே

தையலோன்சொல் சொல்லிடுக சத்தியெந்தன் தலைமேலே
பையவேதான் கொப்புவந்து பழிப்புக்கிட மாச்சுதையோ

சங்கரரும் வந்தாலே சத்தியெனைச் சேர்ப்பாரோ
எங்குசெல்வேன் தாதிகளா எவ்விடத்தில் யானிருப்பேன்

அண்ணனும் அரிகோவிந்தன் அவர்கண்டால் என்சொல்வேன்
குண்ணுதையோ மனதுமிக கோதை என்னசெய்வேனான் என்

## பொது வசனம்

சத்தி தலையில் கொம்பு கண்டு அழுது இருக்கிற காலை நாரதர் வருவது.



## நாரதர் வருகிற கவி

சங்கரர் சத்திகொண்ட தன்னை மடக்கவென்று
இங்கித தையலோன்போல் ஏகியே கொம்பு காட்டி
பங்கமும் செய்து செல்ல பார்வதி தவிக்கும் காலை
நங்கையாம் அம்மன்முன்னே நாரதர் வருகின்றாரே.

## நாரதர் வருகிற தரு

(குமார குருபரா சிவனே என்ற மெட்டு)

நாரத முனிவர் நான்தானே    கலகங்கள் நாடி செய்வேனே
சீரதா கைலை செல்வேனே    சிவனையும் தெரிசித்திடுவேனே
முன்னம்மாங்கனியொன்றுதன்னால்    முருகனை பழனி ஓட்டினேன்
பின்னுமனேககலகஞ்செய்வேன்    பிழையின்றிகலக்கவும்செய்வேன்
கையினில் யாழியொன்நானே    பாடினால் கலங்குவார் தானே
வையகம் வானிலெதிரேது    வல்லவன் யாழியினில் நானே
பூமியை நொடியில் சுற்றிடுவேன்    மூன்றுலகம்நோக்கி வந்திடுவேன்
பந்தயங்கள்கடியவென்றிடுவேன்    கன்னியரைகாணவும்எண்ணேன்

## நாரதர் வரும்போது பார்வதி புலம்பல் தரு

சங்கரர் வரும் நேரம் தானச்சே    யென்செய்வென் தாதிகளா
அங்கமும் வாடுதே    அரும்பாவி என்பாரோ தாதிகளா
என்னென்று வைதுமே    ஏசுவாரே யீசன் தாதிகளா
மன்னவரை நானும்னம்வக்    தெப்படி காண்பேன் தாதிகளா

பார்வதி முக்காடு போட்டிருக்க

நாரதர் கண்டு வணங்குவது தரு

போற்றி போற்றி சத்தியே பொன்னடியைச் சுற்றியே
நேர்த்தி என்னை சுற்றுமே நீயே காரும் பற்றியே

பார்வதி தரு

நாரதா நீ வாழ்குவாய் நாளுமேதான் மேன்மையாய்
சீரதா யிப்போதுமே சேதி என்ன ஓதுமே

நாரதர் தரு

சேதியில்லை அம்மணி சிவனுமெங்கே சும்மா நீ
தாதியோடிருக்கிருய் தயைபுரிந்து கூறுவாய்

பார்வதி தரு

ஜீவஜெந்தை காக்கவே சென்றாரவர் ஏர்க்கவே
ஆவலாய் நீ கேழ்க்கவே அரைந்தேனிதோ தீர்க்கவே

நாரதர் தரு

(முக்காட்டை எடுப்பது)

தலையில் முக்காடேதுக்கு தானெடுத்தேன் வாதுக்கு
மலைபோல் கொம்பு காணுதே மாயமாகத் தோணுதே

பார்வதி தரு

கத்தாதே நீ நில்லுமே கன்னிக்கு வழிசொல்லுமே
எத்தாக யிதுவந்ததே என்னசெய்வேன் வம்பிதே

நாரதர் கவி

ஆகாகா என்ன யிது அானவர் இல்லை என்றீர்
பாகாக கற்பு கெட்ட பாவைபோல் சத்தி நீயும்
வாகாக தலையிற்கொம்பு வந்துமே முக்காடிட்டால்
சாகரம் புவியுள்ளோரும் தான் நகையாரோ வம்மா

நாரதர் தரு

ஐயையோ யிதுவென்ன காலம் அம்மணி வுனக்கிந்த கோலம்
வையகம் நகைக்காதோ வானுள்ளோர் பழிக்காரோ
பைரவமணி பார்வதி கெட்டாளே ஐ

### பார்வதி தரு

நாரதா கத்தாதே நில்லு நங்கை பிழைக்க வழிசொல்லு
போராகிவிடுமிது பேசாதே வுலகெங்கும்
சீரதா யென்செய்வேன் தெரிவிப்பாய் ஓர் வழி நார

### நாரதர் தரு

சுத்தியே யிதுவென்ன கூத்து சகல தேவருமே பார்த்து
மெத்தவே நையாரோ மெல்லியர் வையாரோ
சித்து வித்தைதானோ சிவசத்தி கெட்டது

### பார்வதி தரு

பேசாதே வாயைநீ மூடு பெருமபழி சுமந்தேனே கேடு
ஏசாதே எந்தனை ஈசனும் வருகுவார்
நேசனே என்செய்வேன் நீதா வழி சொல்லும்

### நாரதர் தரு

என்னலாகாதிது அம்மா ஏகுவேன் நானுமே சும்மா
அன்னையே நீ கெட்டால் அகிலமெப்படி கெடும்
பின்னம்நீ சொல்லாதே போகிறேன் நானிதோ

### பார்வதி தரு

கலகமாயிதனை சொல்லாதே கன்னியின்கோலம்புல்லாதே
இலகிய சிவன்கண்டால் என்ன சொல்வாரோதான்
கலம்பெற சொல்லாமல் நாரதா செல்கின்றாய்

### நாரதர் கவி

அம்மணி எந்தனாலே ஆகாது ஒன்றுமேதான்
சும்மாநீ கோபிக்காதே சுந்தரி யானும்சென்று
இம்மென வுலகம்சுற்றி கண்டிடும் அதிசயத்தை
பெம்மானும் நீயும்காண பின்வந்து வுரைசெய்வேனே.

### பொது வசனம்

இந்தப்பிரகாரம் பார்வதியை நாரதர் கண்டு கேலிசெய்ய பார்வதி பயந்து இதற்கு என்னசெய்வது சொல்லும் என நாரதர் எனக்கு தெரியாது திரிலோகசஞ்சரி இதோ போகிறேனென வந்து இதற்கு ஏதோ காரணமில்லாமல் கொம்புவராதென இதை கலகமாய் கொண்டு வைகுந்தம் நாடிவர அப்போது ஸ்ரீமகாவிஷ்ணு வானவர் வைகுந்தத்தில் வருவது.



## ஸ்ரீ மகாவிஷ்ணு வருகிற கவி

செங்கருட வாகனனும் வைகுந்தத்தில்
சித்தர்முத்தர் பத்தர்துதி பாடமிக்க
மங்கையதாம் லக்ஷிமியும் மார்பில்சூழ
மார்க்கமுள சங்குசக்கரம் கையிற்கொண்டு
இங்கிதமாய் யன்பர்களுக் கருள்சுரந்து
இருந்திடுக வேண்டுமென அரவமீதில்
சிங்கார ஆடையதும் பளபளென்ன
ஸ்ரீமகா விஷ்ணுமே வருகின்றாரே.

### விஷ்ணு வருகிற தரு

பத்தாவதார மூர்த்திவந்தேன் சித்தர்முத்தர்கள்
நத்தும்வரங்களெல்லாம் தந்தேன்

அத்திவுயிரைக்காத்தேன் அருங்கடலில்துயின்றேன்
சித்திவித்தையறிந்த தீரர்பலரைக்கொன்றேன்

சுருள்

தேடியேவேதத்தை நாடியேசென்று
ஓடியசோமுகனை வாடிடகொன்றேன் பத்

பாலன்பிரகலாதன் போற்றதுயரகற்ற
மேலும்வந்தேனே நரசிங்கன்

கோலமாகவந்துமே கொன்றேன்இரணியனை
காலன்பயமில்லாமல் காத்தேன்பிரகலாதனை

சுருள்

கைதனில்சங்குடன் சக்கரம்பிடித்தேன்
ஐயமில்லாமலே அவனியைக்காத்தேன் பத்

அசுரர்உபத்திரவம்சொல்ல அமரரெல்லாம்
அறிந்துகார்ப்பேனென்றுமே மெல்ல

தசரதன்சுதனாகத்தான் பூமியில்ஜெனித்து
திசையெங்கும்புகழ்ந்திட தீரன்ராவணன்தன்னை

சுருள்

சித்துசெய்தவன்குலம் கொத்துடன்கொன்றேன்
பத்தன்விபீஷணனுக்கு மெத்தமுடிதந்தேன் பத்

எங்கும்துதித்துஎன்னைப் போற்ற தொண்டர்களெல்லாம்
மங்களம்பேசிமிக வாழ்த்த
சிங்காரமார்பினில் தேவிலட்சுமிசூழ
செங்கருடன்முதுகினில் சிறுவன்கோவிந்தன்காண

சுருள்

சீர்பெறவந்திடு பேர்பெருபாதன்
பாருலகோர்துதி கேருளநீதன் பத்

விஷ்ணு கவி

என்னருகிருக்குமெந்தன் இன்பமும்குணமும்வாய்ந்த
நன்னயதோழமாரே நலமுடன்ஓடிநீங்கள்
அன்னநல்நடையாளான அரிவைலட்சுமியாள்தன்னை
முன்னமேஅழைத்துதானே முடுக்குடன்வருகுவீரே.



## இலட்சுமி வருகிற கவி

கன்னவில்மதனன்தந்தை காசாம்புமேனியோனும்
பன்னகசயனன்தேவி பாவையுமெழுந்திருந்து
வன்னமாமணிகள்பூண்டு வாசமாமலர்கள்சூடி
இன்னிலம்புகழும்மாது இலட்சுமிவருகின்றாளே.

### இலட்சுமி தரு

உலகளந்தபாதன் உத்தமரழைக்கக்கேட்டு
இலகும்பணிகள் துன்ன இலட்சுமிவந்தாள்

காதிலணிந்ததோடு சோதிமிகவேதுன்ன
காதனார்பதத்தைக்காண நங்கையும்வாரேன்

நாடிடும்பொருட்காசி நம்புமேவார்க்கருட்சுரந்து
தேடிட்வரமளிக்கும் தேவியும்வாரேன்

ஆடைபரிமளிக்க அம்புவியோர்தான்களிக்க
பேடைமயிலாளென்ன பெண்மணிவாரேன்

வான்புவியிலெதுமாது தானிவளுக்கொன்றேஒத
கானிலுறை அன்னமென்ன கன்னியும்வாரேன் உல

### இலட்சுமி கொச்சகம்

மண்ணளந்தபொற்பாத மணிவண்ணாவுன்றிருதாள்
கன்னியாள்யான்பணிந்தேன் காத்தென்னையாள்வாயே.

### விஷ்ணு கொச்சகம்

கண்ணேஎன்லட்சுமியே காரிழையேயன்பர்களுக்
குன்னிதவரமளிக்க உனையழைத்தேன்அமர்வாயே.

### பொது வசனம்

இந்தப்பிரகாரம் வைகுந்தத்தில் விஷ்ணுவும் லட்சுமியுமாக அமர்ந்து பத்தர்கட்கருள்சுரந்து இருக்குங்காலை நாரதர்வந்து கண்டு வணங்கிச்சொல்வது.

### நாரதர் தரு

தாத்தா பாதம்வந்தனம் தாள்பணிந்து கொண்டேனே
சேர்த்து வுந்தன்பாதமே சிறுவன்தன்னை யாளுமே

### விஷ்ணு தரு

வாழிவாழி நாரதா வந்ததென்ன சீரதா
ஆழிசூழ்ந்த உலகினில் அதிசயங்கள் உண்டோசொல்

### நாரதர் தரு

பாட்டிபாதம் போற்றினேன் பாலன்மலர் சாற்றினேன்
கூட்டிஎன்னை யாளுமே குழந்தைகுற்றம் தாளுமே

இலட்சுமி தரு

வாரும்வாரும் நாரதா வாழிமிகசீரதா
பாருமிந்த வுலகினில் பார்த்தேசேதி என்னசொல்

நாரதர் தரு

சேதியொன்று மில்லையே சேர்வேன் கைலாசமே
ஆதிகணபதிக்குமே அருமை கலியாணமே

விஷ்ணு தரு

பெண்ணுஎங்கேபார்த்தார்கள் பேருலகில்சேர்த்தார்கள்
உண்மைதன்னைசொல்லுமே உரைத்துபதில்கில்லுமே

நாரதர் தரு

எங்கேயென்றறியேனே எதுக்கதுதெரியேனே
சிங்காரமாய்சென்றாலே சேதிதெரியலாமே

இலட்சுமி தரு

சந்தோஷம் சந்தோஷமே தானும்செல்வோம் வாருமே
எந்தன்நாதா இன்னமும் என்தாமதம் கூறுமே

நாரதர் தரு

ஹரிகரியே அச்சுதா அண்டம்போற்றும் உச்சிதா
சரியுடனே வாருமே தானும்செல்வோம் நேருமே

விஷ்ணு தரு

வாரோம்நாங்கள் நீசென்று வன்னிசத்திய லோகமே
சிரோன்திசைமுகன் தனை தேவியுடன் கொண்டுவா

விஷ்ணு வசனம்

நாம் எல்லாம்போவோம் ஓர் பெரிய கலியாணமாதலால் சத்தியலோகம் சென்று பிரமதேவனை சரஸ்வதியுடன் சீக்கிரம் அழைத்துவா.

நாரதர் கவி

உந்தனின்மொழியைப்போல ஓடியேசத்தியலோகம்
எந்தன் தந்தைதாயை இனிதுடனழைத்துநானும்
வந்துமேசேருகின்றேன் வகையுடன்ஒன்றாய்செல்வோம்
இந்தநேரத்தில்தானே இரும்கொண்டுவருகின்றேனே.

நாரதர் வசனம்

தாதா! தாங்கள் சொல்லியபடி பெரிய இடத்து கலியாணம் கும்பலாக எல்லாம் போகலாம் இதோ சென்று என் தந்தையை தாயை அழைத்துவருகிறேன் அதுவரை இருங்கள்.

## பொது வசனம்

இவ்விதம் நாரதர் சத்தியலோகம் நாடி வருகிறபோது பிரம்மன் சபைக்கு வருவது.

## பிரமதேவன் வருகிற கவி

பத்தியாயுலகிலுள்ள பலபலஜீவர்க்கெல்லாம்
கர்த்தனாய்இருந்துமிக்க கணக்குடன்சிருஷ்டிசெய்யும்
வித்தகனை சுத்த வேதவேதாந்தனை
சத்தியலோகவாசன் சதுர்முகன்வருகின்றாரே.

## பிரமதேவன் தரு

சகலதேவர்கள்புடைகள் சூழவே          சத்தியலோக
சதுர்முகனும் வந்துமேவினார்          கொலுவதாக சது

ஜகம்புகழும் முனிகள்கூடியே          வேதங்களோதி
சீருடன் நெருங்கியோங்கவே          பிரமதேவனும் சது

மாதுவாணி நாவிலமரவே          திசைமுகனும்
மகிழ்ச்சியாக வந்துமேவினார்          சத்தியலோகம் சது

நான்குவேதம் காதில்துலங்கவே          நங்கைமார்களும்
நாடிநடன கீதம்பாடவே          எதிரெதிராய் சது

## பிரமதேவன் கவி

பாசமாயருகிருக்கும் பலபல அமைச்சமாரே
நேசமாய்வேகமோடி நேரிழையாளைநந்தன்
ஆசைக்குஉகந்தமாது அருமைசரஸ்வதியாள் தன்னை
வாசமாயழைத்துஓடி வருகுவீர்வருகுவீரே.

## சரஸ்வதி கவி

புலவர்கள்மனதிலென்றும் பொருந்தியேயமர்ந்தவாணி
பலவிதபணிகள்பூண்டு பாவையுமெழுந்திருந்து
தலைமையாய்ஜீவஜெந்து தான்படைநாதனுநம்
உலகினில் அழைக்கக்கேட்டு உத்தமிவருகின்றாளே.

## சரஸ்வதி தரு

(வந்தாள் சுந்திரமாகவே என்ற மெட்டு)

வந்தேன்          சரஸ்வதி          மாது
வானவர்கள்          புகழ்          சாது
சுந்திரமாகநாடியே          தோகைபருடன் கூடியே          வர்

நாதனு ரனழுங் கவே
நாடிபதம் ஓதிக் கவே
வேதமுறைகள் பாடியே வேணபுஷ்பங்கள் சூடியே வந்

வெள்ளைவுடை யணிந்துமே
வேதனார் பாதம் பணிந்துமே
கள்ளமில்லாமல் ஓடியே கன்னியருடன் தேடியே வந்

நான்முகன் மகிழ் சதி
நானிலம் புகழ் கதி
தான் துதிக்க கோவிந்தன் தனக்கருள் தருபதி வந்

சரஸ்வதி கொச்சகம்

வேதாந்தவேதியரே வித்தகரே போற்றிசெய்தேன்
நீதானழைத்தசேதி நேரிழைக்கு தானுரைப்பீர்.

பிரமன் கொச்சகம்

மாதே சரஸ்வதியே மகிழ்ச்சியுடன் நீவாழி
காதலா யமர்ந்திருக்க கணேணயழைத்தேனே.

பிரமன் வசனம்

சரஸ்வதா! சற்றுநேரம் உல்லாசமா யமர்ந்திருக்கும்பொருட்டு அழைத்தேன் அமர்வாயாக.

பொது வசனம்

இவ்விதம் அமர்ந்திருக்க நாரதர்வந்து சொல்வது.

நாரதர் ஓரடி தரு

தந்தையரே பாதமலர் போற்றி போற்றி

பிரமன்—எந்தன்மைந்தா வாழிநீயே நேர்த்தி நேர்த்தி
நாதன்—தாயேவுந்தன் அடிபணிந்தேன் நானே நானே
சரஸ்வதி—சேயேவாழ்வாய் நீடூழியாய் தானே தானே
நாரதன்—கணபதிக்கு கலியாணம் அப்பா அப்பா
பிரமன்—குணமுடனே காணலாமே எப்போ எப்போ
நாரதன்—நாளைமுகூர்த்தம் தானிது வாரும் வாரும்
சரஸ்வதி—வேளையிதோ சென்றிடுக பாரும் பாரும்

நாரதர் கவி

தந்தையே இந்தசேதி தானுமே வைகுந்தத்தில்
சொந்தமாய் தெரிந்துமேதான் சொல்லிட என்னையிங்கு

விந்தையாய் அனுப்பிவைத்தார் வீண்காலம் போக்கிடாமல்
சந்தோஷ மாகவாரும் தானுமே செல்லலாமே.

0:2M4(P) N53



பிரமன் கவி

சொல்லிவிடும் உன்சொல்போல சுந்திரன்கணபதிக்கு
கல்யாணகாக்ஷிகாண கனமுடன்செல்லுவோம்நாம்.

சரஸ்வதி கவி

மெல்லியும்வந்தேனிதோ மேன்மைநாரதனேநீதான்
நல்லதோர்வழியைக்காட்டி நடப்பாய்நீமுன்னம்தானே.

நாரதர் தரு

நடந்துவாரும் தந்தையே  நானும்போறேன் முந்தியே
முந்தியே பிந்தியே  முக்கியமாய் வந்தியே

பிரமன் தரு

வந்தேன் வெகுதூரமே  வழிநடந்து தீரமே
தீரமே நேரமே  சிறப்பாய்வாரோம் பாருமே

நாரதர் தரு

அப்பா கூடவாருமே  அவசரமே பாருமே
பாருமே நீருமே  பட்சம்வைத்து சாருமே

சரஸ்வதி தரு

நாரதாநான் வந்தேனே  நங்கையும்நான் பிந்தேனே
பிந்தேனே மைந்தனே  பெருமையாக முந்தேனே

பிரமன் கவி

அரவமேல் சயனங்கொள்ளும் ஐயனே அம்மாவுங்கள்
பெருமைசேர்பாதம் தன்னில் பிள்ளையும் வணங்கினேனே.

விஷ்ணு கவி

பிரமனேவாழிவாழி பெருமையாய்கைலைக்குநாம்
ஒருமையாய்செல்லவேண்டி உனையழைத்தோம்செல்வோமே.

பிரமன் வசனம்

என் தந்தை தாயே! அடியேன் உங்களில் பாதகமலத்திற்கு போற்றினேன்.

விஷ்ணு வசனம்

பிரமனே வாழி! நாம் எல்லாம் கைலைக்கு கும்பலாக செல்ல வேண்டி அழைத்தேன் செல்லலாமா? நாரதா என்னபதில், போகலாமா ?

நாரதர் கவி

தாக்தாவேதந்தைதாயே சங்கரர்சுதனின்கோல
நேர்த்தியைக்காணநீங்கள் நேரதாகைலைசெல்லும்
கீர்த்தியாய்உலகம்கொஞ்சம் திரிந்துமேபின்னால்வாரேன்
வேர்த்துயோசனைகளின்றி வேகமாய்செல்லுவீரே.

வசனம்

கேளுங்கள் எல்லோரும் முன்னாக செல்லுங்கள் நான் பின்னால் வருகின்றேன்.

விஷ்ணு தரு வழிநடை

| | |
|---|---|
| வாருமே கைலைசெல்வோம் | நேரதா |
| வஞ்சியாரே | கஞ்சா பாரே |
| வனமாய் வனங்கள் தாண்டி | செல்லவே |

இலட்சுமி தரு

| | |
|---|---|
| நாதனே வந்தேனனே | பின்னையே |
| நாடிதானே | ஓடி நோனே |
| நான்முகன் சரஸ்வதியும் | கூடியே |

பிரமன் தரு

| | |
|---|---|
| தையலே சரஸ்வதியே | வாருமே |
| தங்காதேபின்னால் | எங்கும்பார் முன்னால் |
| தந்திமாமுகன் விவாகம் | பார்க்கவே |

சரஸ்வதி தரு

வேணதோர் வழிகள் தாண்டி வந்தேனே
வெள்ளிமலை கள்ளமில்லை
வேதவே முன்னப்பார் கண்டு போற்றுமே

பொது வசனம்

பார்வதி விஷ்ணுவைக்கண்டு துதிப்பது.

பார்வதி கொச்சகம்

அண்டமளந்தவனே ஹரிகரிவுன்பாதம்
வண்டணிதங்கையிதோ வகையுடன்போற்றிசெய்தேன்
கண்டிடவே அண்ணியுடன் கருதுமயன்சரஸ்வதியும்
கொண்டாடிவந்ததேது கோதைஎனக்கோதுவீரே.

வசனம்

ஏ! அண்ணா! தாங்கள் அண்ணி பிரமதேவன் சரஸ்வதியுடன் வந்த சேதியை தெரியவுரையும் அண்ணா.

ஓரடி விஷ்ணு தரு

வாழிமகராசியதாயம்மாவள்ளல் பரமேசனெங்கேசொல்வாய்

ஓரடி பார்வதி தரு

ஆழிகொண்ட அண்ணனே நாதனும் அகிலம்படியளக்கசென்றாரே

ஓரடி லட்சுமி தரு

அம்மா என்னண்ணனுமீசனும் அவரெங்கேகாணோம்சொல்லுமம்மா

ஓரடி பார்வதி தரு

உம்பர்புகழ் அண்ணியரேசுசன் உலகம்படியளக்க சென்றாரே

ஓரடி பிரமன் தரு

அத்தையரேயீசனெங்கேயம்மா அதையறிந்திடவுரைசெய்யுமே

ஓரடி பார்வதி தரு

சுத்தமுள்ள சதுர்முகனே யான்சொல்வேன்படியளக்கசென்றாரே

ஓரடி சரஸ்வதி தரு

அம்மாசத்திதாயேபரமேசன் அவரெங்கேயுமேசொல்வாயே

ஓரடி பார்வதி தரு

சும்மாசொல்லுவேனுவள்ளலும் சுத்திபடியளக்கசென்றாரே

### பொது வசனம்

இவ்விதம் பார்வதியை ஒருவர்க்கொருவர் மாற்றி மாற்றி பரம சிவனே விசாரித்திருக்க அப்போது நாரதர் தோன்றி பார்வதி மூக் காட்டை எடுத்து சொல்வது.

### நாரதர் தரு

தாத்தாவே ஏமாந்திடாதே என் தந்தையே கிட்டநாடாதே
பார்த்தாயா சத்தியாம் பாவைதலைமேலே
நேர்த்தியாய் கொம்பதால் நேரிழை சொல்லுவாள்

### விஷ்ணு தரு

போனே ஏமார்ந்துபோனேன் பெண்ணென்று பழிக்கலானேன்
நோராய் கொம்பால்குத்தி நேரிழை கொல்வாளே
சீராய் திசைமுகா தேவி ஓடிவாடி

### பார்வதி தரு

அண்ணனே என்ன நான்செய்வேன் அரும்பாவிஎங்குநானுய்வேன்
கண்ணனே உன் தங்கை கன்னிஞனல்லவா
குண்ணி ஓடுவதேனே கோதைக்கு வழிசொல்லும்

### நாரதர் தரு

பாட்டியே எட்டி ஓடிவா பாவைகொல்லுவாளே நாடிவா
மேட்டிமையாகவே மெல்லியும்வெறிகொண்டு
வாட்டி கொம்பினாலே வையகத்தில் கொல்லுவாள்

### இலட்சுமி தரு

நாதனே ஓடாதே பாரு நங்கை எந்தனேயும் காரு
வேதனே ஓடிவா வீணாகமாளாதே
பாதகமாய் நம்மை பாரினில் கொல்லுவாள்

### பிரமன் தரு

நாரதாயிதுவென்னசொல்லு நான்பிழைக்கவேண்டும் நில்லு
கூறுமல் ஓடாதே கூடவரவேண்டும்
வாருஞ்சரஸ்வதி வஞ்சியே நிற்காதே

### பார்வதி தரு

ஐயையோ யிதுவென்னகஷ்டம் அரும்பாவி என்னாலே நஷ்டம்
வையமளந்தவா வஞ்சியைக்காராமல்
ஒய்யாரமாய்நீங்கள் ஓடிட்ஞாயமா

நாரதர் தரு

அம்மா நீஇங்கே நிற்காதே — அருமோசம் வருமேதப்பாதே
சும்மாயிருந்தாலே — சூதாகச்சொல்லுவாள்
வம்பில்லாமல் நீயும் — வாரும் வாரும் ஓடி

சரஸ்வதி கவி

வந்தேன் வந்தேன் நில்லு — நாதாவஞ்சியும் பறிக்கிறாள் வேதா
அந்தாமோங்கிடும் — ஐயையோகொம்பிது
எந்தவிதம் கொல்ல — என்னமாயவந்தது

பொது வசனம்

இப்படி எல்லோரும் பயந்து ஓட பார்வதி சொல்வது.

பார்வதி கவி

என்னநான்செய்வேனண்ணா இப்படி ஓடலாமோ
முன்னமேயீசன்செல்ல முக்கியசேலைதைக்க
வன்னதற்றையல்காரன் வந்தவன்சொல்லைப்போல
பின்னமாய்சொல்லவந்த பிழைபிது ஆகுந்தானே.

வசனம்

ஏ! ஹரி ஹரி அச்சுதா! நந்தமுகுந்தா! ஈசன் படியளக்கச் செல்ல நான தனித்திருக்குங்காலே, சேலைகிழிய, நான் வருத்தப் பட்டிருக்க, ஓர் தையற்காரன் வந்தான் என் சேலையை தைக்கச் சொல்ல அவனை கூடுகிறேனென சும்மா சொன்னால் தைத்துத் தாரேனென, அப்படிசொல்ல, உடனே இப்படி ஆச்சுது, ஓடாமல் இதற்கு வழிசொல்லுமண்ணா.

இலட்சுமி தரு

நல்லது நல்லது அண்ணி — நாதனுரைதான் மறந்து
சொல்லாத சொல்சொல்லி — சுத்த அவுசாரியானாய்

விஷ்ணு தரு

செங்கமலதேவியரே — சிவசக்திதன்னை நீயும்
பங்கப்பட சொல்லலாமா — பாவைக்கு கோபமாகிடாதா

சரஸ்வதி தரு

சத்திசிவ சங்கரியே — தன்னுதனை நீமறந்து
கத்தியழுதுவாடி — கலங்குவது நீதியாமோ

பிரமன் தரு

வித்தைவாணியாணமாதே — வெள்விடையோன்தேவிதன்னை
சுத்தமுடன் வைதிடாதே — சூதுவதோ தோணவில்லை

### பார்வதி புலம்பல் தரு

என்னசெய்வேனெது செய்வேன் சங்கரனே-ஐயோ
இந்தவிதிவரலாச்சே சங்கரனே

கன்னியர் எனைப்பழித்து சங்கரனே-ஐயோ
காரியுமிழலாச்சே சங்கரனே

### இலட்சுமி கந்தார்த்தம்

ஆசைநாதனை மறந்து அகங்காரம்கொண்டு நீயும்
நேசவேறு புருஷர் தன்னை

தரு-நினைந்து வாடவும் ஆகுமோ தலையில் கொம்பு
முளைந்து வரவும் போகுமோ
கனிந்து கனிந்து யிப்போ கன்னியழுதுமென்ன
வினையாய் வேறு நாதனைவேண்டி யிப்படியாமா

### விஷ்ணு கந்தார்த்தம்

மாதே லட்சுமியே யிங்கே மன்னனாய் நானிருந்தும்
ஏதோ யென்வார்த்தை தட்டி

தரு-இப்படி பேசலாகுமா இப்புவியில்
தப்பில்லாமல்தான் போகுமா
எப்போது நான்சொல்ல எதிர்த்துதடுத்துயிங்கே
மெய்ப்பாக பேசுவது மெல்லிநல்லதல்லவே

### சரஸ்வதி கந்தார்த்தம்

சிவசத்தி நீயம்மா சிந்தையில் நாதனைமறந்து
கவனமற்றோரை எண்ணி

தரு-கற்பைகெடுத்தவள் நீயே இன்னும் உயிரை
மெய்ப்பாகவைக்கலாமா தாயே
இப்புவியில் உன்னை எப்படி போற்றுவார்
அம்மணி பாமனின் ஆசைநாயகியோ

### பிரமன் கந்தார்த்தம்

கலைவாணிமானேதேனே கன்னியே எந்தன்சொல்லை
விலக்கியே யிங்கே நீயும்

தரு-வேடிக்கை செய்யலாகுமா சிவசத்தியும்
வாடி வையவும் போகுமா
ஆடும் பாமன்தேவி அரிவையை யிப்படி
பாடிகேலி செய்திட பாவையே ஆகுமா





பொது வசனம்

இவ்விதமாக விஷ்ணு பிரமன் சொல்லையும் தட்டி, இலட்சுமியும் சரஸ்வதியும் கேலிசெய்ய உடனே இவர்கள் தலையிலும் கொம்புகாண அதைக்கண்டு நாரதர் சொல்லுவது.

நாரதர் கந்தார்த்தம்

தாத்தாவே தந்தைபாரும் தாயுடன் பாட்டியார்க்கும்
பூர்த்தியாய் கொம்புதானும்

தரு. பூரித்து வந்திருக்குதே தலையில்தானும்
நேரிது வந்துபாருமே

சீரொத்தலட்சுமி செல்விக்குவந்தாலும்
பேரொத்தயென் தாய்க்கும் பெரியகொம்புதோணுதே

விஷ்ணு கந்தார்த்தம்

பாவையே என்சொல்லை பார்க்காமல் நீங்களும்தான்
கூவியே கேலிசெய்து

தரு. கொம்பு உங்கட்கும்வந்துதே என்னசெய்வது
வம்புமிகவும்கொந்தது

சம்பிரமாம்சொன்னசொல் தட்டியிதனைபெற்று
வெம்பியழுவது வெட்கமானமல்லவா

இலட்சுமி கவி

வெண்ணையு மண்ணுமுண்ட விமலனே எனக்குமேதான்
கண்முன்னே தலையில்கொம்பு கண்டதே என்னசெய்வேன்.

சரஸ்வதி கவி

மண்ணுள்ள ஜீவரோடு மாவுலகெலாம்படைக்கும்
என்நாதனே எனக்கும் இந்தகொம்புவந்ததே.

இலட்சுமி தரு

கண்ணுமணிவண்ணு காரிழைநானென்னசெய்வேன்
என்தலைமேல்கொம்புவந்து இருக்கிறதேநீபாரும்

விஷ்ணு தரு

மாதாசேலட்சுமியே மங்கையேனுனென்னசெய்வேன்
நீதமுடன் உன்தலையில் நீண்டகொம்பு யிருக்கிறதே

பார்வதி தரு

அண்ணனே என்னசெய்வேன் அனைவருக்கும்வந்ததுவே
குண்ணுதே என் மனமும் கோதைநானென்செய்வேன்

நாரதர் தரு

பாட்டியே உனக்குமிந்த பங்கம்வர காலமாச்சே
மேட்டியாம் என்தாய்க்கும் மேலேகொம்பு வந்ததுவே

சரஸ்வதி தரு (ஜம்பை)

வேதாந்தவேதியனே விண்ணவனே என்னசெய்வேன்
ஏதோதான் என்தலையில் இந்தகொம்பு வந்ததுவே

பிரமன் தரு (ஜம்பை)

நங்கை சரஸ்வதியே நானென்ன செய்குவேன்
பங்கம்வரக் காலமாச்சே பாருலகில் நகைப்பாரே

பொது வசனம்

இப்படி எல்லோரும் அழுது துக்கித்திருக்கிறகாலை பரமசிவன் வந்து சொல்வது.

பரமசிவம் கவி

என்னதான்கும்பல்யிங்கே இரைச்சலும்சத்தம்போட்டு
உன்னதமாகததானே ஓகோகோ அழுவதேனே
கன்னியர்தங்களுக்கும் கணக்குடன தலையிலகொம்பு
வண்ணமாவந்ததென்ன வகையுடனுரைசெய்வீரே,

விஷ்ணு கவி

தாய்தந்தைகுருவுமாகி சகலசஜீவர்தன்னை
சேய்போலபாதுகாக்கும் சிவபெருமானேவுந்தன்

நேயயிக்கேலிபோதும் நேரிழைகுற்றம்நீக்கி
மாயமாய்கொம்பைபோக்கி மன்னிக்கவேண்டும்தானே.

பரமசிவம் தரு

கன்னியேவுந்தனின் கர்வமும்நீங்கிற்று பார்வதியே
என்னகாரணம்தான் ஏன்வந்ததுகொம்பு பார்வதியே

பார்வதி தரு

அல்லல்அல்லல்யிது ஆதரித்தாண்டருள் சங்கரனே
சொல்லிடலாமா சுந்திரரயெந்தனுல் சங்கரனே

பரமசிவம் தரு

வம்பாகபேசிடும் வாய்செர்வம்போச்சுதா பார்வதியே
கொம்புமறைந்திடும் கோதையேயஞ்சாதே பார்வதியே

இலட்சுமி தரு

சுரியுரிபோர்த்திடும் கண்ணுதலேகாரும் சங்கரனே
சிரமீதிருக்கும் தீங்கொம்பைபோக்கிடும் சங்கரனே

பரமசிவம் தரு

கன்னியர்தனக்கு கற்பென்பதென்னசொல் லட்சுமியே
என்னபுருஷருக் கெதிர்வாக்கிடுவதா லட்சுமியே

சரஸ்வதி தரு

மான்மழுசூல கபாலங்கரங்கொண்ட சங்கரனே
நான்செய்தபிழைநீக்கி கங்கைகொம்பைபோக்கும் சங்கரனே

பரமசிவன் கவி

அருமைபார்வதியேவுந்தன் அகங்காரம்தனக்காயிந்த
சிறுமையும்செய்துவைத்தேன் திருமகள்வாணியாரும்
பெருமைநாதன்சொல்தட்டி பேசிடகொம்பும்செய்தேன்
வருமமில்லாமலுங்கள் வாழிடம்செல்லுவீரே.

வசனம்

கேளும் பார்வதியே! உன் அகங்காரத்திற்காக உன் சேலேக்கு பின்னங்காட்டி பின் தையற்காரனுகவந்து கற்பின் பங்கம்செய்தேன். இலட்சுமி சரஸ்வதியும் நாதன் சொல்லே மீறிபேசியதால் அவர்களுக்கு அக்கொம்பு வந்தது. ஆனல் இவையெல்லாம் என் திருவிளையாட்லாகும். அவரவர்களும் தங்கள் தங்கள் வாழிடம் செல்லுவீர்களாக.

பொது வசனம்

இந்தப்பிரகாரம் பரமசிவம்சொல்ல அவர்களும் சந்தோஷ மாகச்சென்று வாழ்ந்திருந்தார். இந்த நாடகத்தை அச்சிட்டவரும் பாடியவரும் ஆடியவரும் அன்போடு கேட்டவரும் பரிபூரண திசை வரை சகல பாக்கியமோடு வாழ்ந்து ஸ்ரீசிவபெருமான் பெரும் பதம் சார்ந்து அவர் பாதகமல செந்தேனையுண்டு சென்று வாழ் வீர்களாக, சுபம்! சுபம்!!

மங்களம் தரு

பாடுவோம் பாடுவோமே ஆரன்பதம் பாடு

நாடிகணபதியை நம்மனதிலேற்றி
நல்வேலனசிவுமை அரும்பதத்தைப்போற்றி
தேடிகலைவாணியை சிந்தித்துமேசாற்றி
தெரிந்தபுலவோரை சிந்தையிலேதுதிசெய்து பாடு

மெத்தஅருந்ததி மெல்லிகதைதன்னை
மேல்பட்டாம்பாக்கம்வாழ் சங்கரையர்சுதன்
பத்தன்குப்புசாமி பாரில்தந்தபடி
பாடும்படிகூடலூர் வீரப்பன்கேட்டதை பாடு

தொண்டமாநத்தம்வாழ் சுத்தவன்னியகுலம்
தோன்றிடும்கோவிந்தன் சொல்லநாடகமாய்
கண்டபிழைநீக்கி கருத்தில்மதலையென
காத்துபதம்தனை சேர்த்துஇசையோடு பாடு

சென்னை ஜி. டி. தாண்டவராயப் பிள்ளைத்தெருவாகும்
சீரானஇருபத்து மூன்றும்நெம்பர்வீடு
மன்னன் அமரம்பேடு இராஜாத்தினமுதலியார்
மகிழ்ந்து அச்சிட்டதை மங்களமுடன்வாழ்த்தி பாடு

அருந்ததி கலியாண நாடகம்

முற்றுப் பெற்றது.

---

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை. 1953

மலர்மகள் பதிப்பின்

# நாடக விளம்பரம்

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— இதன் அடியிற்கண்ட புத்தகங்களும், இன்னும் அநேகவிதமான புத்தகங்களும், எமது மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில் தகுந்த வித்வான்களைக்கொண்டு பிழையறச் சீர்திருத்தி அச்சிட்டு வருவதால் யாவரும் மலர்மகள் பதிப்பை கவனித்து வாங்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

| (ரிஜிஸ்டர் காபிரைட் செய்தது) | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| வள்ளி கலியாண நாடகம் | 0 | 12 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகமென்னும் குசலவநாடகம் | 0 | 72 | 0 |
| தாருகாவனரிஷி சரித்திர நாடகம் | 0 | 12 | 0 |
| நரகாசுர சம்மார நாடகம் | 0 | 12 | 0 |
| சந்திரன் கர்வபங்கமென்னும் சந்திராம்பாள் நாடகம் | 0 | 12 | 0 |
| மணிமாலன் சண்டை நாடகம் | 0 | 12 | 0 |
| வீமன் அர்ச்சுனன் யுத்த நாடகம் | 0 | 12 | 0 |
| ஸ்ரீராம ஆஞ்சநேய யுத்த நாடகம் | 1 | 0 | 0 |
| சுபத்திராபரிணய நாடகம் (மாசிலாமணி கவிராயர்) | 1 | 4 | 0 |
| சிறுத்தொண்டபத்தன் நாடகம் ,, | 1 | 4 | 0 |
| நல்லதங்காள் நாடகம் | 1 | 4 | 0 |
| இலட்சுமணதேவி மாலையிடு நாடகம் | 0 | 12 | 0 |
| அருந்ததி கலியாண நாடகம் | 0 | 12 | 0 |
| வல்லாளமகாராஜன் நாடகம் | 0 | 12 | 0 |
| பார்வதி இடப்பாக்கம்பெற்ற மகிடாசூரசம்மார நாடகம் | 0 | 12 | 0 |
| சகுந்தலை நாடகம் | 0 | 12 | 0 |
| சித்திரசேனன் சரித்திர நாடகம் | 0 | 12 | 0 |
| வாணசூரன் சண்டை நாடகம் | 0 | 12 | 0 |
| புனந்திரன் தூதுஎன்னும் சின்ன அர்ச்சுனன் சண்டை | 0 | 12 | 0 |
| கெஜகௌரி என்னும் காந்தாரி நோன்பு நாடகம் | 0 | 12 | 0 |
| துரியோதனன் கெர்வபங்கமென்னும் அர்ச்சுனன்சண்டை | 0 | 12 | 0 |
| சுந்தரராஜன் பாபவிமோசன கிருஷ்ணார்ச்சுனன்சண்டை | 0 | 12 | 0 |
| கெம்பீரண சூரன்வதை துரோபதை கல்லாய்சமைந்தநாடகம் | 0 | 12 | 0 |
| கடோர்கஜன் சண்டை என்னும் துரோபதை நாடகம் | 0 | 12 | 0 |
| மயிலிராவணன் சண்டை நாடகம் மயிலை-பரமசிவமுதலியார் பதிப்பித்தது (அச்சில்) | 1 | 0 | 0 |
| நீலமேகன் பட்டாபிஷேகம் என்னும் மயிலிராவணன் சண்டை நாடகம் சி. எ. சிவபூஷண முதலியார் பதிப்பித்தது (அச்சில்) | 0 | 12 | 0 |

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை. 1953